# திராவிடநாடு

–4–63 | வார வெளியீடு | விலை 16 காசு


# இனிப்பே வா!

—[ சுரா ]—

ஒருவன் உரிமைக்கு மற்றொருவன் தீங்காய்
இறைவன் இருப்பினும் எலும்பை முறித்திடு!
இயற்கையில் எவரும் பிறர்க்கு அடிமையாய்
பிறப்பதும் உண்டோ? பீறிட்டே எழுமுணர்வை
செயற்கையால் அடக்க நினைப்பவர் எவரோ?
இறப்பில் உரிமை எனும்நிலை வந்தால்
இனிப்பே வா!என் இரத்தம் (சிந்தி)
இறந்தும் இறவாப் புகழை மேவுக!

அந்நியச் சீனன் இந்தியர் மண்ணை
எண்ணியே மிதித்தான் எழுந்தது போரே!
அன்னோன் ஈனன் நெஞ்சம் பிளக்க
இந்நாள் இன்றே எடுத்திடு சபதம்!
முன்னோன் வீரம் முகத்திற் கொண்டு,
முத்தமிழில், முக்கனிபாலும் அகத்திற் காண்பாய்!
விண்ணுமதிர மண்ணுமதிர வீணரையழித்தே, வெற்றிகாண
கத்துங் கடலே காட்டுக தீரம்!

# "பசியோ பசி"

எழிலன்

"புசித்துப் புசி" என்பது உலக வழக்கு. இப் பசி உடற் பசி, உளப் பசி என இருவகைப்படும். அவ்வுடற் பசி தணிய வேண்டுமாயின் உணவு தேவை. காலத்தில் உண்டு, அது களையப்படாவிடில் பசி படுத்தும்பாடு சொல்லும் தரத்தன்று. அவ்வுடற் பசியினை வயிற்றுப் பசி, காய்ப் பசி, யானைத் தீப்பசி எனவும் பெயரிட்டு அழைப்பர்.

உடற் பசியான்து தருக்குடையவனையும் தலைகுனியச் செய்யும். தன் மானத் தலைவனையும் வரட்டி நாணச் செய்யும். இல்லானை இல்லாது செய்யும்; எதையும் செய்து, எப்படியும் வாழலாம் என்ற இழிநிலைக்கு ஆளாக்கும். அகவாழ்வு—புறவாழ்வின் பொலிவைச் சிதைக்கும். சீர்கேடுற்ற நெறியில் மனதைச் செலுத்தும். உடல் வனப்பைக் கெடுக்கும், உணர்வைச் சிதைக்கும், உருப்படாச் செயல்களைச் செய்யத் தூண்டும். உலகத்தவர்'பஞ்சை பராரி—பசியாளி—பட்டினி— ஏழை —வறியோன் — தரித்திரன் என்ற பட்டங்களைச் சூட்டக் கொலுவீற்றிருக்கும். ஒளி குறைய இருள் கப்புதல்போல், மறதி மிக மதி குறைவது போல், பசி எனும் கொடுமை வந்து சேர, பண்புகள் எல்லாம் பறந்து போகும்.

மக்களை மாக்கள் நிலைக்கு ஆளாக்காமல் காப்பது நற்பண்புகளாகும். கருவில் அமைந்த திருவும்; கருகாது கனியும் கல்வியும்; ஏற்போர் மகிழச் செய்யும் ஈகை உளமும்; நோன்ருர் பொறுக்குந் திறமும்; நுணுகி ஆயும் அறிவுக் கூர்மையும்; எடுத்த செயலை விடுத்தல் இன்றி முடிக்கும் ஆற்றலும்; நாட்டு மக்கள் வாட்டம் போக்க நாளும் செய்யும் தொண்டும்; அறவழிப்படுத்தும் அன்பும் — அருளும்; பசி எனும் பாவிக்குப் பயந்து போம். என்பதனை மணிமேகலை,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி"

என்று எடுத்து இயம்புகின்றது.

அத்துடன் நில்லாது நரைதிரை மூத்தோனை நலியச் செய்யும். கழியா இளமையை, கலங்கா மனதைக் கரையச் செய்து களிநடமிடும். மானம் — வெட்கம்' அறியாது மதியைக் கெடுக்கும். ஊன் வாட,உடல் குறுக, வெம்மை, ஊழித் தீ, நஞ்சு, பெரு மழை, கடுங் காற்று விளைக்காத வினையெல்லாம் விளையச் செய்யும். 'ஐயோ, அம்மா' என்ற வாழ்த்தொலி வானைப் பிளக்க, வறுமை, எனும் ஒரு குடை நீழலில் கொடுங்கோல் புரியும் கொற்றவன் உடற்பசியாம். அதனுல்தான் வள்ளுவர் நெருப்பினுள் உறங்குதலும் முடியும்; ஆனுல் வறுமையில் பசி நோயில் வாழ்தல் அரிதிலும் அரிதென்ருர்.

நாட்டில் போரும்—பூசலும்,பொச்சரிப்பும்—பொல்லாங்கும், இகலும்—இகழும், வெறியுணர்வும் — நெறியற்ற போக்கும், நிலவச் செய்வது பசியாகும். மனத்தில் சஞ்சலமும்—சலசலப்பும் ஏற்படுத்திச் சாந்தம் குலைக்கவல்லது. சமுதாயத்தில் தீரா நோய்–தில்லுமுல்லு,மாரு மடைமை —மமதைப் போக்கு, வெற்றுக் கூச்சல்—வேதனைக் குரல் கொடுமைத் தீ—குனிந்த வாழ்வு ஆகியவை கொடுக்கும் கொடை வள்ளல் பசிக் கொடுமை எனின் மிகையாகாது.

குன்றன்ன வான்பொருள் ஈட்டியவன்; எட்டடுக்கு மாளிகையில் படாடோபமாக வாழ்கின்றவன்; காசும் — கவடமும் கலந்து தூவி காரியம் ஆற்றுபவன்; செல்வத்துப் பயன் ஈதல்என்பதை உணராதவன்; பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பாதவன்; தொடுத்த செல்வத்தைத் தானும் துய்த்தல் இன்றி, தொழுவாருக்கும் கொடுக்காதவன்; கூடு விட்டுப் போகும் உயிர்கொண்டு போவதில்லை என்பதை அறியாதவன்; கேடு கெட்ட மனிதன்; பீடு அற்ற பேதை; நாளும் பசிக்கவில்லை; புசிக்க முடியவில்லை என்று புலம்பித் தவிக்கின்ருன்.

பணத்தைக் கண்டு படை நடுங்குவதுபோல் பசியும் நடுங்கி, அவனை அணுக அஞ்சுகின்றது. ஆனுல் சிலரிடம் இருந்து அகல மறுக்கின்றது. நல்லவன் குணத்தைக் கொல்லுகின்றது. பொல்லா வழியில் பொருள் சேர்த்து வாழும் புல்லனைக் கண்டு அஞ்சுகின்றது. பணக்காரன் 'பசிக்கவில்லையே' என்று படும்பாட்டிலும், பஞ்சை பசி தொலையவில்லையே என்றுபடும்பாடு சொல்லும் தரத்தன்று. அப்பசியைப் போக்க வழி அடிசில் மட்டுமல்ல. அன்போடு, இன்முகத்தோடு உபசரிக்கும் பாங்கே பசி போக்க மிகுதியும் தேவையாம். அவ்வாறு உணவு இடாது "முப்பழம் முழுபால் அன்னம் முகங் கடுத்திடுவாராயின் கப்பிய பசியினேடு கடும்பசி ஆகுந் தானே" என்று விவேக சிந்தாமணி செப்புகின்றது.

இதுவரை வயிற்றுப் பசி படுத்தும் பாட்டைப் பார்த்தோம். அது அழிவைத் தருமே அன்றிக் கிஞ்சிற்றும் மகிழ்ச்சியைத் தராது. ஆனுல் அதற்கு மாறுபட்ட செய்கை நலங்கொண்டது உளப் பசியாகும். அதனை மனப்பசி—அறிவுப்பசி என வும் அழைப்பர். உளப்பசி ஒரு சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுக்கும், வாழ்வுக்கும் — வளமைக்கும், பண்புக்கும்—பழக்கத்துக்கும் துணை நிற்பது. இதனுல் அகம் தூய்மை பெறும்; அறியாமை நீங்கும்; அறிவொளி வீசும். அருளும்—அன்பும் அறவழி நிற்கும். நாட்டு நடப்பும், ஏட்டுப் படிப்பும் அறிய அறிய அறிவுப் பசி மிகும். அறிவுப் பசி அகிலத்தில் மிகின் துடுக்கத்தனம் தொலையும்; தொல்லை விலகும்; அறந் தழைக்கும்; மறம் மாளும். அறிவுப் பசி மிக மிக நாகரிகம் செம்மையுற்று, நல்லாட்சி மலரும். தேனின் சுவையும், தீந்தமிழ் இனிமையும், வானின் உயர்வும், இயற்கைக் கவர்ச்சியும் ஆற்றின் விரைவும், அலைகடலின் ஆழமும் அறிவுத் துறையில் நல்க வல்லது உளப் பசியாகும்.

(16-ம் பக்கம் பார்க்க)

# நமது நோக்கம்

மலர் 21 ] ஆண்டு சந்தா ரூ. 8 (7—4—1963) தனிப்பிரதி 16-காசு [ இதழ் 32.

★ தனக்கென வாழாப் பிறர்க்குரியவர்கள் நாம்.

★ தன்நலம் தேடும் சின்னப்புத்தி நம்மிடம் கிடையாது.

★ நமக்கென ஒரு கட்சியும், அக்கட்சிக்கென ஒரு கொள்கையும் உண்டு.

என்ருலும்,

நாட்டுக்குப் பொது ஆபத்து என்றவுடனே, நமது கொள்கையை
நிறுத்திக்கொண்டோம் — தள்ளிவைத்துவிட்டோம்.

முதலில் நாட்டுக்கேற்பட்ட பேராபத்து நீங்கட்டும்.

அதற்கே நமது முழு உழைப்பையும் நல்குவோம்.

இதுவே நமது நீங்காக் கடமை என்பதனையும்
உணர்ந்துவிட்டோம்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் என்பதெல்லாம், முற்றிலும் நாடு நமதே,
இனிப் பயமில்லை என்ற நிலை ஏற்பட்ட பின்னர்தான்
என்பதை அறிந்தவர்கள்

## நாம்.

எனவே, எமது முழு ஒத்துழைப்பும் நாட்டுக்கு ஏற்பட்ட
கேடு தீரும்வரை

## உண்டு.

**இது, நமது கழகத்தின் ஒருமித்த கருத்தாகும்.**

## வெற்றி நமதே

# வாழ்வளித்தவன்

— பழநி —

பகல் மணி ஒன்றிருக்கும். அப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டு கூடத்தறைக்கு வந்த மல்லி சற்று ஓய்வாக ஊஞ்சலில் சாய்ந்தாள்.

பகலில் தூங்கிப் பழக்கமில்லாத காரணத்தால், தூக்கம்வர மறுத்தது. கதிரவன், இனி, மாலை ஐந்து மணிக்குத்தான் வருவான். அதுவரை என்ன செய்வதென்று எண்ணிக்கொண்டிருந்த மல்லிக்குக் கடந்தகால நிகழ்ச்சிகள் கோர்வையாக நினைவுக்கு வந்தன.

வாலிபத்தின் வாசலிலே நுழைந்து, எண்ணத்திலேயே புத்துலகைக் காணும் பருவத்தில்தான், இதயத்தின் இயல்பை அறிந்த அறிஞர்கள்கூட அஞ்சும் அந்தக் காரியத்தைச் செய்தான் கதிரவன், ஆம் அவளைக் கைபிடித்து அவளுக்கு வாழ்வளித்தான்!

நடந்த சம்பவங்கள் — கடந்த பாதை—தொடர்ந்த துணிபு அது ஒரு விசித்திரமான கதை.

✲

"மல்லி வெந்நீர் அடுப்பிற்குக் கொஞ்சம் நெருப்பைப்போட்டு வை. இன்னும் சிறிது நேரத்தில் குளிக்க வேண்டும்."

"ரொம்ப அவசரந்தான்!"

"இந்தச் சின்ன வேலையைக்கூட எனக்காகச் செய்யக்கூடாதா? என்னவோ உன்னிடம் சொல்லமல் அத்தையிடமே சொல்லியிருக்கலாம் போலிருக்கிறதே!"

"யார் வேண்டாமென்று தடுத்தார்களாம்? காலையில் எழுந்து குளிப்பதிலிந்து இரவு படுக்கச் செல்லும் வரை எதெற்கெடுத்தாலும் மல்லிதான். அம்மா உங்களுக்குக் கொடுக்கும் சலுகையில் என் உயிரையே வாங்கிவிடுகிறீர்கள்!"

"மல்லி! ஏன் எதற்கெடுத்தாலும் கோபித்துக்கொள்கிறாய்? நீ விரும்பாத எதையாவது செய்கிறேனா?"

"அத்தான், அப்படியானால் நான் ஒன்றை விருப்பிக்கேட்டால் அதைச் செய்வீர்களா?"

"நீயாகத்தான் விரும்பி எதையும் கேட்பதில்லையே!"

"கேட்டால் செய்வீர்களாக்கும்!"

"கட்டாயம் செய்வேன்."

"மல்லி மல்லியென்று 'என்னவோ' மாதிரி அடிக்கடி கூப்பிடுகிறீர்களே அதை மட்டும் குறைத்து தேவையானபொழுது மல்லிகா என்று அழைத்தால் போதும்."

மலர்ந்த மலரை முகர்ந்து,பின்னர் காலில் போட்டுத் தேய்த்ததைப் போல் பரிதாபமாக மாறியது அவன் முகம்!

## துடுப்பதி

இந்த உலகில் யாருக்காக நாம் அன்பைக் கொட்டி எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோமோ, அவர்களிடமிருந்துதான் நமக்கு வெறுப்புக் கிடைக்கிறது; ஆனால் நம்மால் வெறுத்து ஒதுக்கப் படுபவர்களிடமிருந்துதான் எதிர்பாராத நன்மையை நாம் அடைகிறோம். இதை அவள் அறிவாளா என்ன?

கதிரவன் — மல்லிகாவின் உரையாடலில் பிற்பகுதியைக் கேட்டுக் கொண்டே வந்த மல்லிகாவின் தாய், கதிரவன் பேச்சற்ற நிலையில் குளியலறையில் புகுந்ததையும் கவனித்தாள்,

"என்ன மல்லி, காலையில் எழுந்ததும் அவனிடம் அப்படித்தான் மனம் புண்படும்படி பேசுவதா? இது உனக்கே நல்லாயிருக்கிறதா?"

"வயசுப் பெண்ணிடம் எதற்கெடுத்தாலும் 'மல்லி மல்லி'யென்று வளைய வருவதை, நீ தடுப்பது போய், நானே சொன்னால் அது தப்பா?"

"அவன் உன் மாமன் மகன் தானே! உனக்கு நாளை கணவனாக வரப் போகிறவன், அன்பாகப் பேர் சொல்லிக் கூப்பிட்டால் அதிலென்ன தப்பு?"

"நீயும் அத்தான் கட்சிதானே!"

"காலையில் எழுந்து, நேரத்தில் அலுவலகத்திற்குப் போகவேண்டுமென்று, நேற்றே என்னிடம் சொல்லியிருந்தான். நான்தான் மறந்துவிட்டேன். அதைக்கூடத் தவறாக நினைக்காமல் உன்னிடம் ஒரு பேச்சு, நெருப்புப் போடச் சொன்னதற்கு நீயே நெருப்பாகச் சுட்டுவிட்டாயே! பாவம், அவனுக்கு நம்மைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?"

"சரி போதும், அண்ணன் மகன் பெருமை."

✲

குளித்துவிட்டுத் துண்டைத் தோளில் போர்த்தியபடி பரந்த மார்பின் அழகை மறைத்து, கதவின் அருகே வந்த கதிரவனுக்கு அந்தக் காட்சி தென்பட்டது.

அடுத்த வீட்டுக் கொல்லைப் புறத்தில் கையில் 'டூத் பிரசு'டன் உல்லாச நடை பழகினான் ஒரு அழகிய வாலிபன். சிறிதும் ஓசையின்றி நடக்க, அவன் காலணி இசைந்து வந்தது. மெதுவாக ஒரு சினிமாப்

( 13-ம் பக்கம் பார்க்க )

# "சுமைதாங்கி"

கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டதுபோல் என்பார்களே, அதைப் போல் இருந்தது எனக்கு. மதுரை பாசஞ்சரில் எழுமூரில் இறங்கிய நான், வெளியே வர நினைவிழந்தவனாய், பிளாட்பாரத்திலேயே நின்ற வண்ணமிருந்தேன். வரிசை வரிசையாய் விதவிதமான மக்கள் வெள்ளம்போல், விடிந்தும் விடியாத இந்த வைகறைப் பொழுதில் சுறுசுறுப்பாகச் சென்று கொண்டிருந்தது. சிவப்புத் துணியைக் கட்டியவண்ணம் கூலிக்காக அங்குமிங்கும் அலைந்தவண்ணமிருந்தனர் போர்ட்டர்கள். வாடகைக் கார்களின் 'ஹார்ன்' ஓசைகள் மற்றொருபுறம் செவிகளைத் துளைத்தன. கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் குறைய ஆரம்பித்தது. தூரத்தில் பூக்கூடைகளை இறக்கியபடியிருந்தனர். சென்னை மண்ணை நான் மிதிப்பது இதுதான் முதல் தடவையா என்ற தயக்கம் என் மனதுள் பிறந்தது. முன்பு நான் இங்கு வந்ததற்கும், இப்போது வருவதற்கும் உள்ள வேறுபாடுகளை உணர்ந்தபோது என் கண்களில் ஏனோ நீர் சொட்ட ஆரம்பித்தது.

பெரிய உணவு விடுதிகளில் தனி அறை எடுத்துக்கொண்டு தங்குவேன், சென்னைக்கு வரும்பொதெல்லாம்.

ஆனல் இன்று...?

பிறரின் தயவை எதிர்ப்பார்க்க வேண்டியல்லவா நேர்ந்துவிட்டது. மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு நடக்க ஆரம்பித்தேன். வாசலில் நின்ற பரிசோதகரிடம் டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தேன்.

விடியற்காலையிலே எழுமூர்ப் பகுதி கலகலப்பாக இருந்தது. அரசினர் பேருந்திகளும், வாடகைச் சிற்றூர்திகளும் வரிசையாய் நின்று கொண்டிருக்கின்றன. காவலர்கள் பிரயாணிகளை வரிசையாக நிற்க வைத்து வாடகை வண்டிகளை ஒழுங்குமுறையில் ஏற்பாடு செய்து தருகின்றனர். மார்கழி மாதத்துக் குளிர் காற்று உடலைத் தழுவிற்று. பனித்திரை செங்கதிரின் வரவினை உணராது, மெல்லிய திரையாக நகரைப் போர்த்துக்கொண்டிருந்தது. இறுமாந்து, துள்ளித் திரியும் சீமானைப்போல்!

மீண்டும் என் மனதில் "எங்கே போவது...?" என்ற கேள்வி முகிழ்த்தது. ஏனிந்தத் தயக்கம் ஏற்படுகிறது என்றே விளங்கவில்லை.

**பண்-நெடுமாறன்**

தோழனுக்குத் தோழனாய், உறவிற்கு உறவாய் வாழ்ந்த நண்பன் உயர்ந்த நிலையில் இருக்கையில், என்னையறியாமல் என் மனம் கூச்சமடைவது ஏன்?

"முரளியிடம் நீ போகத்தான் வேண்டுமா?

"பின் என்ன செய்வது? எனக்குள்ள ஒரே ஒரு புகலிடம் அவன் தானே!"

அம்மாவும், விமலாவும் கண்ணில் மாறி மாறி வந்தனர்.

"அத்தான்! இன்று நமக்குஆதரவு கிடைக்கக்கூடிய இடம், ஒன்றே ஒன்றுதான். நமது நிலை இப்படி ஆகிவிட்டதை முரளியண்ணனுக்குத் தெரியப்படுத்தியிருந்தால் கூடப் போதும், அவரே ஓடோடி வந்திருப்பார். நீங்கள்தான் பிடிவாதமாக "அவனுக்கு எதுவும் தெரியக்கூடாதென்று" கூறிவிட்டீர்கள்.

"என்ன இருந்தாலும் அவன் நம்மோடு வாழ்ந்தவனதானே. அவனிடம் போக உனக்கேன்டா இவ்வளவு வெட்கம்? நீபோகவேண்டாம்; என்னை அனுப்பி வை, இல்லேன்னு ஒரு கடிதமாவது போடு. இதையெல்லாம் விட்டுட்டு முரட்டுப் பிடிவாதத்தோடு சின்னஞ் சிறுசுகளைத் தினமும் இரண்டு வேளை பட்டினி போடறது உனக்கே நல்லாயிருக்கா — வியாபாரிகள் கிட்டே போய்க் கெஞ்சிச் சரக்கு மட்டும் கடன் கேட்கலாம். சிநேகிதன் நம் வீட்டுப் பிள்ளை மாதிரி. அங்குபோய் உதவி கேட்டால் என்ன குறைந்துவிடும்..."

அம்மாவின் கண்டிப்பான குரல் மீண்டும் எதிரொலித்தது. அவர்களது எண்ணம் தவறானதல்ல, நியாயமானதுதான். நான்தான் எனக்கே இயல்பான கூச்சத்தினாலும், ஏதோ ஒரு வரட்டுக் கௌரவத்தினாலும், "நாமே முயன்று பார்ப்போம், பிறருக்கேன் தொல்லை தரவேண்டும்" என்றுஇருந்துவிட்டேன்.

*

சைக்கிள் ரிக்ஷா ஒன்று என்னை இடிப்பதுபோல் வந்து நின்றது.

"ஏம்பா! கால்மணி நேரமாக பெல் அடிச்சிகீறேனே காதுலே வுழலீயா......" என்றவாறே சென்றான்.

நேராக மயிலாப்பூர் பஸ் நிற்குமிடத்தை நோக்கி நடந்தேன். நல்ல

வேளையாக வண்டி தயாராக நின்றது; ஏறி உட்கார்ந்தேன். நினைவு என்னைப் பின் நோக்கி அழைத்துச் சென்றது.

இன்று, நான் முரளியின் நண்பனென்றால், ஊர் நகைக்கும், பைத்தியத்தில் நான் ஒருவிதம் என்று எண்ணி!

ஆனால் கடந்த காலத்திற்கு உண்மை தெரியுமே!

○

இளம் வயதில் முரளி தன்னுடைய விதவைத் தாயுடன் வாழ்க்கையைப் பல்வேறு துன்பங்களுக்கிடையே நடத்தினான். பள்ளியில் அவன் படித்த நாட்கள் குறைவுதான். அவனுடைய அடக்கமான தோற்றமும், நல்ல பண்பும் என்னைக் கவர்ந்தன. இணைபிரியா நண்பர்களானோம். வறுமை நிறைந்த வாழ்க்கை. சில சமயங்களிலே பட்டினியாகவே பள்ளிக்கு வருவான். அப்போதுகூட அவன் முகத்தில் புன்னகை தவழும். முகத்தை அவன் என்றுமே சோகமாக—சோர்வு தவழுவதாக வைத்துக் கொள்ளவே மாட்டான். வாழ்வெனும் நாடகத்தில்கூட அவன், கைதேர்ந்த நடிகன்தான்!

முரளி பள்ளி நாடகங்களிலே பரிசு பெற என்றும் தவறியதில்லை. ஒவ்வொரு தடவையும் அவன் பரிசு பெறுகையிலும் அவன் உள்ளத்துள் புதைந்து கிடந்த கலையார்வம், சுடர்விட்டுப் பிரகாசிக்கும். முரளியின் திறமையைக் கண்ட என் தந்தை திருச்சியில் முகாமிட்டிருந்த நாடகக் கம்பெனி ஒன்றின் நிர்வாகிக்கு முரளியை அறிமுகப்படுத்தி வைத்து, அவனை நிரந்தர நடிகனாகவே சேர்த்துவிட்டார். வருமானம் ஓரளவு குடும்ப வாழ்வை நடத்தப் போதுமானதாக இருந்தது. முரளி தனது திறமையினால் நல்ல பெயரெடுத்ததை அறிந்தபோது எல்லாரும் மனமகிழ்வடைந்தோம்.

நாட்கள் ஓடி மறைந்துவிட்டன. படிப்பை முடித்துக்கொண்டு நான் தந்தையுடன் வியாபாரத்தில் ஈடுபட்டேன். இதற்கிடையில் ஒருநாள் முரளியிடமிருந்து தந்தியொன்று வந்தது. முரளியின் தாய் காலமான சேதி, எங்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. அப்பாவிற்கு அந்தச் சமயம் உடல் நலமற்றிருந்ததால், நானே திருச்சிக்குப் போய் முரளிக்கு ஆதரவு சொல்லி வந்தேன். அதற்குப் பிறகு முரளியிடமிருந்து கடிதமே இல்லை. நானும் வியாபார விஷயமாக திருச்சூர், கோவை, மதுரை போன்ற இடங்களில் சுற்றியபடி இருந்ததினால் முரளிக்குக் கடிதம் எழுத முடியவில்லை.

“என்ன சார்! எங்கே போகணும்?”

கண்டக்டரின் குரல் சிந்தனையைக் கலைத்தது.

“லஸ் கார்னர்”

சில்லரையை வாங்கிக்கொண்டு, கண்டக்டர் டிக்கெட்டைக் கிழித்துக் கொடுத்துவிட்டுமுன்புறம் சென்றான். வண்டி புறப்பட்டது.

கிழக்கே பகலவன் செங்கதிர் வட்டமிட்டவண்ணம் மேலே ஏறிக்கொண்டிருந்தது. வழி நெடுக வளர்ந்திருந்த மரங்களையும், எழும்பியிருந்த புதிய கட்டிடங்களையும் பார்த்தவண்ணம் என் சிந்தனையின் திசையை மாற்ற எண்ணினேன். முடியவில்லை!

○

இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. ஒருநாள் முரளியிடமிருந்து எனக்குக் கடிதம் வந்திருந்தது. சினிமாவில் நடிக்க வாய்ப்பு வந்திருக்கிறதென்றும், சென்னைக்கு வந்துவிட்டதாகவும் எழுதியிருந்தான். அத்துடன், தன்னுடன் நடித்துவந்த நாடக நடிகை ஒருத்தியைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டதாகவும், அது ஒரு எதிர்பாராத சூழ்நிலையில் நடந்துவிட்டதாகவும்அதற்காகத் தன்னை மன்னித்துவிடுமாறும் எழுதியிருந்தான்.

திடீரென்று மாரடைப்பினால் அப்பா காலமாகிவிட்டார். எங்கள் குடும்பத்திற்கு இது பெருத்த அதிர்ச்சி—முரளி தன் மனைவியுடன் வந்து ஆறுதல் கூறிவிட்டுச் சென்றான்.

○

பஸ் எதிராஜ் பெண்கள் கல்லூரியைத் தாண்டிற்று.

குடும்பத்தின் சுமையுடன் வியாபாரக் கவலைகளும் சேர்ந்து கொண்டன. அப்பாவினுடைய திறமை எனக்கில்லாத காரணமோ என்னவோ, வியாபாரம் மந்தப்படலாயிற்று.வெளியூர்போவதிலிருந்து, கடையைக் கவனித்துக் கொள்வதுவரை நான் ஒருவனே! முரளியின் நினைவு எனக்கு வரவில்லை. அவன் இதற்குள் நன்றாக வளர்ந்துவிட்டான். பெரிய நடிகன் என்று புகழ்ந்தனர். தூரத்திலிருந்தே இதைக் கவனித்தேன். வியாபார சம்மந்தமாக வெளியூர் போயிருக்கையில் முரளி இரண்டு மூன்று தடவைகளிலும் வீட்டிற்கு வந்து தங்கிவிட்டுப் போயிருந்தானென்று கூறினார்கள். விடிந்ததிலிருந்து படப்பிடிப்பு, விழாக்கள், வெளியூர்ப் பயணம் என்று அவன் அலைந்து கொண்டிருந்தான். சொந்தத்தில் படம் வேறு எடுப்பதாகப் பத்திரிக்கையில் படித்திருந்தேன்.

இதற்குள் என் வியாபாரம் நொடித்துப் போய்விட்டது. கடனுக்காக, இருந்த கடையையும் வீட்டையும் விற்றுக் கொடுத்தாயிற்று. என்னுள்ளிருந்த பிடிவாத உணர்ச்சி, நாமே முயன்று முன்னேறுவோம்; பிறருக்கேன் வீண் தொல்லை தருவது என்று பலவிதங்களில் வாழ்க்கையை ஓட்டினேன். அது விழலுக்கிறைத்த நீர்தான்...!

என் ஒருவனை நம்பி வாழும் தாய், மனைவி, பிள்ளைகள், இவர்களை எத்தனை நாட்களுக்குத்தான் வதைப்பது...? அதுவும் என் மனைவிக்கு இது ஒன்பதாவது மாதம்......

பிடிவாதத்தையும், கூச்சத்தையும் விட்டுவிட்டு முரளியைச் சந்திக்கக் கிளம்பிவிட்டேன்.

○

“லஸ்...”

கண்டக்டரின் குரல்.

பையை எடுத்துக்கொண்டு கீழே இறங்கினேன்.

பொழுது நன்றாகப் புலர்ந்துவிட்டது. கடைகளைத் திறந்துகொண்டிருந்தனர். ஹோட்டல்களிலுள்ள வானொலிப் பெட்டிகளிலிருந்து இசைத் தட்டின் பாடல்கள் எதிரொலித்த வண்ணமிருந்தன.

அகன்ற வீதிகளைக் கடந்து கால் போன போக்கிலே நடந்துகொண்டிருந்தேன். பையிலிருந்த சேலம் மாம்பழங்கள் மணத்தை வீசின. அத்துடன் எங்களூர் ‘ஸ்பெஷல்’ சரக்கான முந்திரிப்பருப்பு, முரளிக்கு ரொம்பவும் பிடிக்குமென்று அம்மாவே வாங்கிக்கொடுத்திருந்தார்கள். இதைப் பார்க்கையில் எனக்கு ஒரு கணம் சிரிப்புத்தான் வந்தது.

அவனோ சீமான்—

மேலை நாட்டுப்பழ வகைகளிலும், பிறவற்றிலும் மூழ்குபவன், அவனுக்காகவா இவை...?

என்னுடைய கரங்கள் கொடுத்தே இதுவரை பழகிவிட்டிருந்தன. எவ

(9-ம் பக்கம் பார்க்க)

# "தியாகம்தானா...?"

—[ குழலோன் ]—

அருமை நண்பா!

உறையின்மேல் உன் கையெழுத்தைப் பார்த்ததும், தென்றலின் குளிர்மையை, மலரின்மென்மையை உணர்ந்தது என் உள்ளம். ஆனால், அதில் உள்ள வேதனை வரிகளால், என் இதயம் பெரும் புயலையும், கருகியமலரின் பரிதாப நிலையையும் உணர்ந்து, ஊமை அழுகை அழுகிறது.

ஆம், நண்பா! திடீரென்று வெடித்துச் சிதறும் எரிமலைபோல் என் உள்ளம், பழைய எண்ணங்களின் வேதனையும், நாளைய கடமையின் கேள்விக் குறியுமாக குழம்பி நிற்கிறது.

இருண்ட எதிர்காலப் பாதையில், கண்மூடித், திசை அறிய முயலாது, கால்போன வழி வந்துகொண்டிருந்த என்னை, உன் கடிதம் சிறிது இடற வைத்திருக்கிறது.

நண்பா, நீண்ட நாட்களாகக் கூறவேண்டும் என்று எண்ணி, ஆனால் கூற முடியாமல், வேதனைப் பட்டுக்கொண்டிருந்த நான், இன்று, இக்கடித மூலம் கூற முற்பட்டிருக்கிறேன். எவ்வளவோ செய்திகள், ஒருவருக்கொருவர், மறைக்காமல் கூறி, நல்லதையும், கெட்டதையும் பகிர்ந்துகொண்ட நம்மில், ஒரு பெரிய தடையாகஇருந்த (ஆம்! என் மனதில்) ஒரு செய்தியை இன்று எழுதுகிறேன்.

நீ நினைக்கலாம், உயிரினும் மேலாக மதித்த நட்பில், ஒளிவு, மறைவா! துரோகமல்லவா? என்று.

என்ன செய்வது நண்பா? பெரும் காற்றில், அழகான மலரானாலும், உதிர்ந்து விழுவதில்லையா! ஆம், அதுபோல்தான், புனிதமான 'நட்பு' என்ற மலர், 'சுயநலம்' என்ற சூரு வளியால், உதிர்ந்து விழுந்து, கறை படிந்துவிட்டது.

கடிதம் என்பதால், வளர்த்தாமல், என் கதையைக் கூறுகிறேன்.

நண்பா! அன்று, நான், உன்னுடைய மனைவி கண்மணி, நீ மூவரும் ஒரே பள்ளியில் படித்துக் கொண்டிருந்தோம். குழந்தைத்தனமான, கள்ளம், கவடு அற்ற, அவள் நம்மிருவரையும் கவர்ந்தாள். நட்பு இறுகியது.

நண்பா! உனக்குக் கூறவேண்டும் என்று துணிந்து எழுத அமர்ந்தேன். ஆனால், இப்போது எழுதவே முடியவில்லை. ஆம் நண்பா! கண்காணாத இடத்தில், உள்ளமும் உடலும் நலிய இருக்கும் நீ, இக்கடிதத்தைப் படிக்கும்போது, என்னென்ன உணர்வு அலைகளால் தாக்கப்படுவாய், என்று எண்ணும்போது.........

நண்பா, நான் எழுதுவது உனக்கு அதிக வேதனையைத் தரும் என்றால், என்னை மன்னித்துவிடு.

அந்த நறுமலரின் மணம்—கண்மணியின் நட்பு—எனக்கு ஏதோ ஒரு இனிய சுவை, இதயத்தில் படர விட்டது. எட்டாத கற்பனை உலகில் மிதக்கவிட்டது.

ஒருநாள் வெள்ளிக்கிழமை! கட்டழகுப் பெண் அவள், தலை குளித்து, ஈரம் உலராத கூந்தலை அள்ளி முடித்து, அதில், வெண்முத்துக்கோவையென, மல்லிகைச் சரம் சூடித், தளர் நடையிட்டு, மஞ்சள் பூசிய கன்னங்களில், காலை இளஞ் சூரியனின் செந்நிறமென, நாணம் படர்ந்து நிற்க, செவ்விய ரோசா இதழில், தூங்கும் பனித்துளியென, கருவண்டுக் கண்களின்ஒளிமின்ன, நண்பா—கனவுலக நங்கையென, எதிர்நின்று, மோனச் சிரிப்பில் முகம் காட்டி நின்று, பேசினாளே அவள்...மறக்க முடியாத காட்சி... இதயத்துச் செப்பேட்டில் அழிக்க முடியாத ஒரு அழகு வரி அது.

அன்றுமுதல்தான், என் இதயம் அவளுடன் என்னைப் பிணைத்துப் பார்க்கத் தூண்டியது. ஏதோ ஒரு புதுப் பொருள் உணர்த்தியது.

அப்போதும், அவளின் அழகுத் தோற்றத்தை இருவரும் நுகர்ந்து புகழ்ந்தோம் அல்லவா? நம்முடைய நட்பின் ஒரு அங்கம் அவள் என்ற தற்பெருமை நமக்கு! இருப்பினும், நம் இருவருக்குள் எந்தவித வேற்றுமை உணர்வும் உண்டாகவில்லை. ஏன்? அன்றைய நம் மனம் அப்படி. எண்ணத்தின் உயர்ந்த வளர்ச்சி! இதயத்தின் பண்பாடு! ஒரு இளமங்கையுடன் ஒருவன் பேசினாலும், கண்களைக் குறுக்கிக்கொண்டு, ஏக்கமும் ஏளனமும் கலந்து பார்க்கும், சாதாரண குறுகிய உலகத்திற்கும் அப்பால், பெருந்தன்மையான, பண்பட்ட இதயத்துடன் எதிலும் அழகை, அன்பைப் போற்றும் குணத்தால்!

ஆனால், அதற்குப் பிறகு; என் மனதில், இன்பமும், துன்பமும் கலந்த இனம் புரியா உணர்வு நிரம்பி வழிந்தது. அவள் அழகு முகம், அடிக்கடி, என் கண்முன் தோன்றி, ஏதோ என்னிடம் எதிர்பார்த்துக் கெஞ்சுவதுபோல் ஒரு பிரமை. ஆனால், உண்மை என்னவெனில், அவளிடம், என் இதயம்தான், அன்பைவேண்டி நின்றது. அவளின் துணை தேவை என்றது. அணை போட முடியவில்லை, அந்த அன்புக்கு!

எண்ணத்தில் பேதமில்லாதபோது, ஏன் அவளை விரும்பக்கூடாது. அவளுக்கு நான் தகுந்தவனல்லவா? அவளும் நம்முடன் பழகவில்லையா? நம்மைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்தால், வெறுத்திருந்தால் நம்மிடம் நட்புறவு கொண்டு, அன்புடன் பழகுவாளா? அவளும் என்னிடம், அன்பு கொள்வாள். என் இதய வேதனைக்கு நிச்சயம் இனிய மருந்தாவாள் என்று நம்பினேன்.

ஆம் நண்பா! நம்பிக்கை என்ற கோட்டைச் சுவரின் உச்சியில்

நின்று, வானத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தேன். வானம் அருகில்தான் இருக்கிறது. எட்டிவிடலாம். ஒளி வீசும் நிலவும், கண் சிமிட்டும் தாரகைகளும் ! என் விளையாட்டுப் பொருள்களாகிவிடும் என்றெல்லாம் கனவு கண்டேன். ஆனால், அப்போது கீழே குனிந்து பார்க்க நினைக்கவுமில்லை, முயலவுமில்லை. அப்படிச் செய்திருந்தால் தெரியும், என்னுடைய மற்றைய நிலைமை! ஆழம் காணாத, படுபாதாளத்தில், தலைசுற்றி மயங்கி வீழ்ந்திருப்பேன். என் தவறையும் உணர்ந்திருப்பேன்.

கண்மணி, குழந்தைத் தனமாகச் சிரித்தாலும், அந்தச் சிரிப்பில் எனக்கு ஏதோ இரகசியம் கூறுகிறாள் என்றே என் மனம் எண்ணியது. பைத்தியக்கார எண்ணங்கள்!

'மனிதன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதில் எவ்வளவு புத்திசாலியாக இருக்கிறான்' என்பது பெரியவர்கள் கூற்றன்றோ! அதைப்போல, அன்று என் நிலை இருந்தது. 'மணி' என்று என்னை அழைத்தால் போதும், ஏனோ, என் மனம், கற்பனை உலகில், எட்டாத கனவுலகில் சுதந்திரமாகச் சுற்றித் திரியும். என் இதயம், பறந்து சென்று, அவளின் பிஞ்சுக் கைகளில், நடனமிடுவதுபோல் ஒரு பிரமை!

இயற்கையாக வரும் ஒரு சபலம்! ஒருநாள், ஒரு அழகிய பெண் தெருவில் சென்று கொண்டிருந்தாள். நான் அவளைப் பார்த்தேன். ஆம்! அவள் அழகை நுகர்ந்தேன்.

அவளுடன் போனவன், என் நண்பன் — அவள் காதலனும்! — உனக்குக் கூடத் தெரிந்திருக்கும், 'கோகுலன்' — என்னிடம் வந்து, 'மணி, என்ன இது? சிறிதுகூட நாகரிகம் இல்லை! அவள் என்னவள்! இனி இம்மாதிரியெல்லாம் நடக்காதே!' என்றவன், வேகமாகத் திரும்பினான் சொல்ல.

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. சிரித்துக்கொண்டே, 'கோகுலன்! இதைக் கேட்க உனக்கு வெட்கமாக இல்லை? நீ விரும்புகிறாய்...உண்மை! அதற்காக என்னைப் பார்க்க வேண்டாம் என்று கூற உனக்கு என்ன உரிமை இருக்கிறது?! அவள் தோட்டத்தில் பூத்த மலர்! தோட்டக்காரனேகூட, அது நான் பயிரிட்டு மலர்ந்த மலர்! பார்க்க, போற்ற உரிமையில்லைஎன்று கூறமுடியுமா? பறிக்கும்போதுதானே அப்பா 'உரிமைப் பிரச்சினை!' என்றேன். 'திருதிரு', என்று விழித்துக் கொண்டே போய்விட்டான்.

ஆனால், அவன் உள்ளத்து உணர்ச்சி அலைகளின் எரிச்சல், அதைப்போன்ற சூழ்நிலையில் நான் சிக்கி அனுபவித்தபோதுதான் உணர்ந்தேன்.

அன்றொருநாள், கண்மணியின் எழுதுகோலை நீ எடுத்துவைத்துக் கொண்டு, விளையாட்டுக் காட்டும்போது, ஏதோ ஒரு வலி, எரிச்சல் என் மனதில்! நெஞ்சில் உண்டாகும் அனல், வெளிவர முடியாமல் தொண்டையில் சிக்க, ஏதோ ஒரு பயங்கரப் பள்ளத்தில் விழுவது போன்ற உணர்வில் மயங்கி, சாய, இருவரும் விளையாட்டை விட்டுவிட்டு, என்னைக் கவனிக்க ஓடிவந்தீர்களே! நினைவிருக்கிறதா? ஆம்! நான் அன்பு செலுத்தும் பெண்ணிடம், மற்றவன் விளையாடுவதா? என்ற கேள்வியின் வேகம் என்னை இந்நிலைக்கு கொண்டுவந்துவிட்டது! மாற்றானாக இருந்தால், சச்சரவு எழுந்திருக்கும்! ஆனால் உயிர் நண்பனல்லவா நீ! சமாளித்துக்கொண்டேன்.

வெள்ளிக்கிழமை, பெருந்தன்மையோடு, உயர்ந்த நோக்கத்தோடு இருந்த என் இதயம், பண்பாட்டின் சிகரத்தில், இருந்த என் எண்ணங்கள், திங்கட் கிழமை காலை, 'சுயநலம்' என்ற வழுக்குப் பாறையில், சறுக்கிக் கொண்டிருந்தது.

தன்னைப் பிணைக்காத, கட்டுப்படுத்தாதபோதுதான், தத்துவமும், அறிவுரையும், பெருந்தன்மையான எண்ணங்களும்! 'தனது' என்ற சுயநல எண்ணம் வரும்போது, அச்சூழ்நிலையில் தாமே சிக்கிக்கொள்ளும்போது, ஏனோ இப்பாழும் மனித மனம் நம்மை இருண்ட பாதையில், குறுகிய உலகத்தில் சேர்த்து, சாமான்யனாக்கிவிடுகிறது!

என்னை நானே தேற்றிக்கொண்டேன்! நண்பன் இத்துணைநாள் பேசவில்லையா? பழகவில்லையா? ஏன் இன்று மட்டும் நாம் இவ்வாறானோம்? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன்! அதற்கு விடையாக, 'நான் அவளை மனமாரக் காதலிக்கிறேன்!' என்று ஓங்காரக் கூச்சலிட்டது இதயம்! அந்த ஓசையில், என் நல்லெண்ணங்கள் மங்கி, ஒடுங்கி மூலையில் ஒதுங்கிக் கொண்டன.

நேரம் நெருங்கியது. அவளை அணுகினேன். 'மன்னிக்கவேண்டும்' என்றாள்! 'ஏன்?' என்றேன். 'நான் 'தங்கராசு'வைத்தான் காதலிக்கிறேன்' என்றாள். வானத்தில் பறக்கும் வெண்புறாவை, கண் சிமிட்டும் தாரகை என்று எண்ணிய என் முட்டாள்தனத்திற்கு என்னவென்பது! சாதாரணமாகச் சிரித்துப் பேசினாலே, காதல் வந்துவிட்டதாக எண்ணும் அறியாமைக்காக வெட்கப்பட்டேன் நண்பா!

என் இதயத்தை பண்படுத்திக் கொண்டேன். ஏன், இரும்பாக்கிக் கொண்டேன். மனைவி என்ற கடலை நோக்கிச் சென்ற, அன்பு வெள்ளம், சகோதரி என்ற பாசக் கடலுக்குத் திசை திருப்பி விடப்பட்டது. ஆம்! அன்றுமுதல் இன்றுவரை அதே உறவைத்தான் என் மனம் வழிபட்டு வருகிறது.

இதை உன்னிடம் அன்றே கூறியிருக்கலாம். எரிந்துவிட்ட சாம்பலை, ஏன் கிளற வேண்டும்? அந்தத் தூசு கண்ணில்பட்டு நீர் நிறையப் போகிறதே என்றுதான் கூறவில்லை இன்றுவரை நண்பா! தவறானால் மன்னித்துவிடு!

இந்நிலையில், நீ இவ்வாறு கடிதம் வரைந்திருக்கிறாய்! உன் ஆசைக்குப் பொருள் இருக்கிறது. ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால், என் நிலையில், அவள் நிலையில் நின்று சிந்தித்துப் பார்த்தாயா? சகோதரியாக ஏற்ற என் மனம், திரும்பவும் எப்படி மனைவியாக நினைக்க முடியும்? மனமும், தூய எண்ணங்களும், என்ன பென்சிலில் எழுதின எழுத்துக்களா? சந்தர்ப்பம் என்ற இரப்பரில் அழித்துவிட்டு, வேறு எழுதிக்கொள்ள! அப்படிச் செய்வதுதான், மனிதத் தன்மையா? சிந்தித்துப்பார் நண்பா!

குழந்தைத்தனமான, அவள் பிஞ்சு இதயம், இந்தப் பேரிடியை எவ்வாறு தாங்கும்? நீ ஆண்மை இழந்துவிட்டாய்! உண்மை! வாழ்க்கை என்ற இன்ப வரிகளின் அலங்கார அடுக்குச் சிதையும். ஆனால், அதனால் மட்டும் வெறுமை தோன்றுமா? வரிகளின் அலங்கார அடுக்குச் சிதைந்தாலும், பொருள் புரியுமே! வாழ்க்கை என்பது மனதால வாழுவதுதானே!

அவள், கீழான உணர்ச்சிகளுக்குத் தன்னைப் பலவீனமாக்கிக்கொண்டிருந்தால், நீ கூறுவது சரிதான். ஆனால், அவள், உள்ளத் துய்மையான, புனிதமான எண்ணங்களின்

உருவாக உன்னைப் போற்றி, வழி படுவதானால், அவளை ஏன் இழிந்த பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்? செய்யும் செயலில் உண்மை இருந்தால்தான், பகுத்துணர்ந்து செய்தால்தான் சீர்திருத்தமே அன்றி, மனசாட்சியை எதிர்த்து வெறியில் செய்வதெல்லாம் சீர்திருத்தம் ஆகாது. நாம் சொல்லும், நல்லவைகள், உண்மைகள், சமுகம் புரிந்து ஒத்துக்கொண்டால்தான் சீர்திருத்தம்!

தன் இளமைக் கனவுகள் அழியக் கூடாது, என்று நினைப்பவளுக்கு உன் முடிவு ஏற்றதே! ஆனால், தன் வாழ்க்கையின் இன்பமே, உன் ஒருவனையே நினைத்து, எண்ணத்தால் வாழ எண்ணினல், நீ அவளை வற்புறுத்துவது மடைமையல்லவா?

உன் கடிதத்தில், 'நான் செய்தது தியாகம்தானு?' என்று கேட்டிருக்கிருய். அவளின் விருப்பத்தை முழுமை செய்வதில்தான் உன் மனதிலும் அமைதி, அவளுக்கும் மன நிறைவு அங்குதான் தியாகமும் முழுமைபெறுகிறது.

மலர்ந்தமலர் சருகாகுமுன் அது பயன்படாமல்—பயன்படுத்தப் படாமல்போவது அநீதி அல்லவா? என்று கேட்கிருய். மலர்ந்தமலர், பயன்படுத்தப்பட வேண்டியதுதான். ஆனல், சூடிக்கொண்டிருப்பவர்கள் அனுமதி இன்றி, தட்டிப்பறிப்பது மனிதத் தன்மையா?

மனிதன் பிறந்தவுடன் இறந்தால் பயன் இல்லைதான். ஆனுல், பிறந்து, மனசாட்சிக்கு மதிப்பளிக்காமல், வாழ்ந்து, தானும் அல்லற்பட்டு, மாற்ருருக்கும் துன்பம் அளிப்பதானல், அவன் வாழ்ந்துதான் என்ன பயன்? அதைவிடப் பிறந்தவுடன் இறப்பதே மேலல்லவா?

ஆகவே, அவள்நிலை அறியாமல், நீ, இம்முடிவுக்கு வந்தது தவறு. உள்ளத்து, உண்மையான உணர்ச்சியில்தான் வாழ்க்கையே தவிர, மற்றச் சாதாரண ஆசாபாசங்களில் வாழ்க்கை முழுமை பெறுவதில்லை.

ஆகவே, உன் உடலின் நலத்தில் நாட்டம்கொண்டு; நாட்டையும் மீட்டு, வீட்டையும் காக்க விரைந்து வா நண்பா! மன உறுதியால்தான் எந்த வெற்றியும் நம்மிடம் அடைக்கலம் புகுகிறது. ஆகவே விரைந்து வா! வாழ்க்கை நிச்சயம் நிறைந்து விடும்.

உன் நண்பன்
மாசிலாமணி.

6-ம் பக்கத் தொடர்ச்சி

ருடைய உதவியையும் இன்றுவரை நான் பெற்றதில்லை. என் வாழ்க்கையிலேயே அந்த நிகழ்ச்சி, பிறரிடம் உதவி கோரி வருவது முதல் தடவையாக இன்றுதான் நிகழ்கிறது.

முரளியை விட்டால்வேறு எவரும் எனக்கு இன்றுள்ள நிலையில் உதவமாட்டார்கள்தான்—

பங்களாவை நெருங்கிவிட்டேன். அந்தக் காலை நேரத்திலேயே இளைஞர்கள் பலர் வாசலில் நின்றவண்ணம்,உள்ளே எட்டிப்பார்த்தவண்ணமிருந்தனர். சினிமா நடிகர்களின் வீட்டை முற்றுகையிடுவதே இன்று நம் இளைஞர்களுக்கு ஒரு பொழுது போக்காக இருக்கிறதே!

உள்ளே—

நிறையக் கார்கள் நின்றுகொண்டிருந்தன. பெரிய மனிதர்கள் கவலை தோய்ந்த முகத்துடன் பரபரப்பாக இருந்ததைக் கண்டவுடன், எனக்கு என்னையறியாமல் ஏதோ பய உணர்வு பிறந்தது.

பங்களாவின் உள்ளே நான் காலடி எடுத்து வைப்பதற்கும், "ஐயோ... என்னை மோசம் பண்ணிவிட்டீங்களே" என்ற ஓலக் குரல் கேட்பதற்கும் சரியாக இருந்தது. திகைப்புடன் உள்ளே ஓடினேன்.

அங்கு—

சாய்வு நாற்காலியில் புன்முறுவல் தவழச் சாய்ந்திருந்தான் முரளி. அவனது குறுகுறுத்த நயனங்களை இமையெனும் கதவுகள் மூடிவிட்டன. மேக்கப் கலையாத அந்த முகத்தைக் கண்டவுடன், எனக்கு வந்தது ஆவேசம்.

முரளி....நீ....இறந்தாபோனுய்.... உன்னைத் தேடி வந்திருக்கேண்டா... ஒரே ஒரு தடவை கண் விழி...... என்னை .....உன் செல்வத்தைப் பாரடா!"

மயங்கி அவன்மீது சாய்ந்தேன். பின் நினைவில்லை.

நினைக்கவே முடியாதவை நடந்துவிட்டன. எவனைத்தேடி, ஓடோடி வந்தேனே அவன் கண்களை மூடி விட்டான்......இல்லை எனக்கு முன், என்னுடைய தரித்திரம் வந்து அவனைக் கொன்றுவிட்டது. அவன் சாகக்கூடிய வயதா அது? முதல் நாள் இரவு படப்பிடிப்பிற்காக ஸ்டூடியோ சென்றவன், காலையில மார்புவலிக்கிறது என்று கூறி வீடு வந்திருக்கிருன். டாக்டர் வருவதற்குள் இறப்பு வந்துவிட்டதே!

வெள்ளை உடையில் முரளியின் மனைவி சகுந்தலாவைப் பார்க்கையில் என் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. அதைவிட நெஞ்சை உலுக்கும் நிகழ்ச்சிகளும் நடக்கத்தான் செய்தன. முரளியின் கடனுக்காக எல்லாச் சொத்தும் ஏலத்திற்கு வந்துவிட்டன. அவனுடன் பழகிய வர்களே, சொத்தைக் கடனுக்காகப் பங்கு போட்டுக்கொண்டதை நினைத்தபோது, "நட்பு" என்பது இவர்களுக்குப் பெரிய காட்சிப் பொருளாக உள்ளதுபோலும் என்று எண்ணிக்கொண்டேன். இதுஎன்ன வள்ளுவர் காலமா? வாழ்க்கையை எப்படியும் நடத்தலாமென்றவர்களின் காலம்தானே!

இரண்டு படங்கள் சொந்தத்தில் தயாரித்துச், சம்பாதித்தவைகளை இழந்துவிட்டான் என்று பின்னல் தெரிய வந்தது. பங்களாவை வாங்கியவர், காலிசெய்ய ஒரே வாரம் மட்டும் தவணை தந்தார்.

சகுந்தலாவின் நிலைமை என்னை விடப் பயங்கரமானதுதான். மூன்று வயதான பிள்ளை வேறு.

"இனிமேல் என்ன செய்வதாக உனக்கு உத்தேசம்?"

"எனக்கு ஒன்றுமே புரியலே. ஆதரவான இடமிருப்பதாக என்னல் முடிவுகட்ட முடியவில்லை...... வீட்டாரைப் பகைத்துக்கொண்டு, இவரை மணஞ்செய்துகொண்டேன். நிலைமை நல்லாயிருந்தாலும், உறவு சொந்தம்கொண்டாடிவரும். ஆனல் இப்பொழுது......?".

"ஏனம்மா அப்படிச் சொல்லி விட்டாய்? நாங்களெல்லாம் இல்லையா? அனுதையாகவிடவா செய்வோம். நான் குடிக்கிற கூழோ, தண்ணியோ பகிர்ந்து சாப்பிடலாம். எனக்கொரு தங்கையிருந்து அவளுக்கு இப்படியானல் சும்மா விட்டுவிடுவேனு?" என்றேன் உறுதியுடன்.

அன்றிரவு—

என்னுடன் இரு உயிர்களைச் சுமந்தவண்ணம் ஓடிக்கொண்டிருந்தது திருவனந்தபுரம் பாசஞ்சர்!

என் துயரைத் துடைக்க ஒரே ஒருவனுன முரளியிடம் ஓடினேன். அவனே என்னை நம்பி இரு உயிர்களை ஒப்படைத்துவிட்டான். அதோ கவலையற்று உறங்கும் இளம் முகம், அதன் தாய்ப்பறவை.......இவர்கள் வாழ்வை நாட்டாற்றில்விடலாமா?

கொடுத்துப் பழகிய கைகள் பிறரிடம் யாசிப்பதில்லை. வெயிலில் ஒதுங்கியவர்களுக்கு நிழல் தரும் மரம், தனக்காக என்ருவது நிழல் தேடியதுண்டா? ✻

# தமிழ் செய்த தீங்கா?

—ந. பொன்னுசாமி—

அன்புள்ள நண்பா!

உனக்கு இக்கடிதத்தை நான் எழுதுவது மனம் வெதும்பியல்ல; வெறுப்பினாலும் அல்ல. உள்ள நிலையைத்தான் சொல்கிறேன்... ஏன் இப்படிச் செய்யக்கூடாது, செய்தால் தான் என்ன, செய்யலாமே---என்றுதான் கேட்கிறேன். நீயே யோசித்துப் பார்.

தமிழ் படித்தவர்கள் --- தமிழாசிரியர்கள் என்போர் உயர்நிலைப் பள்ளிகளிலோ, வேறு எங்கோ வேலைபார்க்கிறார்கள். இளங் கலைஞர்கள் (பி.ஏ.) என்று சொல்லப்படுவோரும் வேலை செய்கிறார்கள். தமிழ் படித்தவர்கள் பயிற்சியென்று ஐந்தாறு திங்கள் எடுக்கிறார்கள். அவர்களும் ஓராண்டு எடுக்கிறார்கள். இருவருக்கும் உள்ள வேறுபாடு,இவையேயென்று சொல்லலாம். படிப்பில், தமிழ் படித்தவர்கள் இலக்கியம்,இலக்கணம்,வரலாறு, கல்வெட்டு என்று இவ்வகையில் இருக்கும். அவர்கள் இலக்கியம் பொருளாதாரம், வரலாறு, அறிவியல், அரசியல் என்று இந்த வகையில் அமையலாம். பொதுவாகத் தோன்றும் வேறுபாடு இவையே.

அவர்கள் நான்காண்டுகள் படிக்கிறார்கள். தமிழ் பயின்றவர்களும் நான்காண்டுசுள்தான் படிக்கிறார்கள். அவர்கன் பெறுகிற சம்பளந்தான் இவர்களும் பெறுகிறார்கள். அவர்கள் பெறுகிற மதிப்புத்தான் இவர்களும் பெறுகிறார்கள். ஏற்றத்தாழ்வு வேறு எதுவும் இல்லை. இளங் கலைஞர்கள் பயிற்சி முடிந்தவுடனேயோ பிறகோ, ஒரு பள்ளிக்குத் தலைமை ஆசிரியராக அமர்கின்றார்கள். தமிழ் படித்தவர்களோ பயிற்சி முடிந்த உடனே பிறகோ் தலைமை ஆசிரியர்களாக அமர்கின்றார்கள் என்று சொல்வதற்கில்லை.

ஏன் என்று இப்படிக் கேட்பது தமிழ்மீது கொண்டுள்ள் ஒரு வெறியென்று எண்ணிவிடக்கூடாது; ஆங்கிலத்தின் மீது கொண்டுள்ள அருவருப்பும் அல்ல. இப்படிக் கேட்டால்---கேட்பவர்கள்மீது சீறிப் பாய்வதற்கும் அல்ல. நீ கூறலாம், நண்பா! நிர்வாகம் என்றால் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டுமென்று! ஒரு பள்ளியையோ வேறு எதையோ நிர்வாகம் செய்வதற்கு ஆங்கிலம்தான் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நிர்வாகம் என்பது ஆங்கிலம் கற்றால்தான் வரும் என்று எண்ணுவதும் தவறான மனப்பான்மை. தெரிந்திருந்தால் நல்லது. மிக நல்லது. அவ்வளவே!

ஆங்கிலத்தின் இன்றியமையாத் தேவையை உணரும் எவரும், அம்மொழியின்மீது வெறுப்போ விரோதமோ கொள்ளமாட்டார்கள். வெளிநாட்டுத் தொர்புக்கும் இந்நாட்டுச் சூழ்நிலைக்கும் ஆங்கிலம் மிக மிக இன்றியமையாததுதான்.

ஆனால், தமிழும் தமிழாசிரியர்களும் புறக்கணிக்கப்படவோ வெறுத்தொதுக்கப்படவோ கூடாதென்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், தமிழ் மொழிக்கு அடுத்த இடம் ஆங்கிலத்திற்குத்தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

தமிழ் படித்தவர்கள் தலைமை ஆசிரியர்களாக அமையக்கூடாதா? நிர்வ்ாகம் செய்யத்தெரியாதா? தமிழ் படித்தவர்கள் எல்லாரும் நிர்வாகம் என்றால் என்னவென்று அறியார்களா? தமிழ்ப்படிப்புப் படித்துவிட்ட காரணத்தால் தலைமையாசிரியராக வரவே முடியாதா? தலைமையின்றிச் சாதாரணமாக ஒருவராகவே வாழ்நாள் முழுதும் கழிக்கவேண்டுமா? போகட்டும், தமிழ்மட்டும் தெரிந்து ஆங்கிலம் தெரியாத காரணத்தால் இவ்வாறு--இந்நிலையென்று கூறலாம். ஆங்கிலம் தெரிந்த எத்தனையோபேர் இருந்தும் அவர்களும் இப்படித்தானே வாழ்கிறார்கள், ஏன் இதையெல்லாம் எண்ணிப்பார்க்கக் கூடாது? ஏன் இதையெல்லாம் சிந்தனை உரைகல்லில் உரைத்துப் பார்க்கக்கூடாது?--என்றுதான் நண்பா உன்னைக் கேட்கிறேன்:

இங்ஙனம் நிகழ்வது தமிழ்செய்த தீங்கா? நான் எண்ணுவது இதுதான். நிர்வாகம் என்பது மொழிகொண்டு அமைவது அல்ல; பட்டங்கொண்டு அமைவதுஅல்ல.ஆங்கிலம் தெரிந்தும் இருக்கலாம், தெரியாமல் இருந்தாலும் இருக்கலாம். அதைப்பற்றிய கவலைவேண்டியதில்லை. இவை வேதனைக் குரலிலிருந்து வெடித்து வந்தவை என்று தள்ளிவிடக்கூடாது, இவற்றையும் சிந்தனைக்குக் கொண்டு வரலாம். இதையும் செயலாற்றலாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் செப்டம்பர், அக்டோபர் என்று ஆண்டின் இடையிலும் தேர்வு எழுதலாம்.தமிழ்ப் படிப்பு எடுத்தவர்களோ இடையில் எதுவும் செய்யமுடியாது. இவர்களுக்கு மார்ச் ஒன்றே! அவர்கள் அதுவும் தனித்தனியான பாகங்களாக எழுதலாம்.இவர்களோ எல்லாம் எமுத வேண்டும், ஒன்று தவறியிருந்தாலும்! எத்துணை வேற்றுமை!

பொதுவாக மாணவர்கள் வகுப்பாசிரியர்கள் என்று குறிப்பிடுவது ஆங்கிலம் எடுத்தவர்களைத்தான். ஏன் தமிழ் எடுப்பவர்களைக் கூறக்கூடாது என்கிறேன்? உரியோர், உள்ளோர், வருகைப் பட்டியல் பெயர் இவையெல்லாம் மாறவேண்டும். இவையெல்லாம் பெருங்குறை என்றுதான் கூறுவேன். விண்ணில் எங்கோ விளங்கிக் கொண்டிருக்கும் துருவ மீன்போல எங்கோ ஓரிடத்தில் துணைத் தலைமையாசிரியராக இருப்பதாக அறிகிறேன். ஆங்கிலம் படித்த காரணத்தால் மேலே ஒருவர் தமிழ் படித்த கரரணத்தால் தாழ ஒருவர். விந்தையான செய்தியாக இல்லையா, நண்பா. படி. நீயும் யோசித்து உன் மனத்தில் உள்ள உள்ளவற்றை தெளிவுடன் எனக்கு எழுது.

கல்லூரிகளில் தமிழ் போதனுமொழிஏற்படவேண்டும்என்பதற்கே பெரிய போராட்டம் நடத்தித் தீர வேண்டிய இந்நாளில், இதெல்லாம் அரசினரின் செவிக்கு ஏறுமா என்று கேட்கிறாயா? இன்றுள்ள நிலையில் எதனையும் போராடித்தான் பெற வேண்டும் போலும்! போர் என்றால் அறப்போர் என்பதை மறந்துவிடாதே.

அறப்போர் முறையைக் கையாண்டால், எந்த முடியாத செயலையும் முடித்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு காரியத்தில் ஈடுபட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை --- உன் கருத்தையும் எழுது.

அன்பன்,
எழிலன்

# கள்ளத்தோணி

த. கலைக்கோவன்

அன்றைய செய்தித் தாளைப் பார்த்த என்னால் திடுக்கிடாமல் இருக்கமுடியவில்லை. ஆம்! "கள்ளத் தோணி ஏறி இலங்கை சென்ற கணவன் இறந்ததால் மனைவி நஞ்சு குடித்து மாண்டாள்!" இதுதான் அன்றைய நாளிதழில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. கள்ளத்தோணி ஏறிக் கடல் கடந்து கண்டிச் சீமைக்குப் பிழைக்கப்போன முப்பத்தாறு தமிழர்களில் முப்பத்து மூன்று பேரின் கதி......?

வாழ வகையின்றிப் பெற்றெடுத்த தாயையும், பிறந்த பொன்னாட்டையும், உற்றார், உறவினர், பெண்டு பிள்ளைகளை விட்டுக் கடல் கடந்து சென்று கூலி வேலைசெய்து குடலைக் கழுவுவோம்; பெற்றெடுத்தவரை, இன்பச் செல்வங்களை காப்பாற்றுவோம்; என்று சென்றவர்கள் கடலிலே பிணமாகிக் கரையிலே கிடந்தனராம்! வயிற்றுப் பசியைப்போக்க — வாழ்க்கையிலே சிறகடித்துப் பறக்கத் துடித்தவர்கள் கடலின் கோரப் பசிக்கு இரையானார்களாம்! அவர்களின் பெற்றோரும், பெண்டு பிள்ளைகளும், மற்றோரும் கதறியழும் காட்சி பரிதாபமாக இருக்கிறதாம்!

ஐயகோ! தனது நாட்டில் வாழவழியின்றித்–தட்டுத்தடுமாறிப் பிழைக்க வகைதேடிச் சேய் நாட்டிற்கு ஓடும் செல்வங்களின் முடிவு இப்படித்தானா ஆகவேண்டும்?

செய்தித் தாளிலே பதிந்திருந்த என் கண்கள் என்னையறியாமலேயே இரண்டு சொட்டு நீரைக் கொட்டின. 'மனைவி நஞ்சு குடித்து மாண்டாள்!' என் மூளை குழம்பியது. ஏன் அவள் சாகவேண்டும்? எதற்காக அவள் கணவன் இலங்கை போகவேண்டும்? —ஆயிரமாயிரம் கேள்விகள் எழுந்தன. வறுமை......! வறுமை......! வறுமை......! எட்டுத் திக்கிலுமிருந்தும் இதே ஒலிகள்...இதே குரல்கள்! நூற்றுக்கணக்கான ஓலக் குரல்கள் என் செவியை துளைத்தெடுத்தன. வறுமை...வறுமை...ஐயகோ! எங்கெங்கும் வறுமைதானா? அதன் கோர தாண்டவம் அடங்க வழியில்லையா? என் தலை சுற்றியது; சிந்தனை சுழன்றது.

•

"அத்தான்! நீங்கள் அவசியம் கொழும்புக்குப் போய்த்தான் ஆகவேண்டுமா? 'கள்ளத்தோணி'யில் போவோர்களைக் கடற்கரையில் இருக்கும் காவற்காரர்கள் சுட்டுக் கொன்றுவிடுகிறார்களாமே அத்தான்! சொல்லுங்கள் அத்தான்! 'போகவில்லை' என்று ஒரு வார்த்தை! நாம் இங்கு கூலிவேலை செய்தாவது பிழைத்துவிடுவோம்! வேண்டாம்; நீங்கள் கண்டிச் சீமைக்குப் போக வேண்டாம்! இருவரும் உழைத்தால் இங்கு கால் வயிற்றுக் கஞ்சியாவது கிடைத்துவிடும்! உங்களைப் பிரிந்து ஒரு விநாடிகூட என்னால் உயிர்வாழ முடியாது அத்தான்!"

—அவனது கரங்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சிக் கதறினாள் அவள். அவன் மனம்தான் கல்லாகி விட்டதே! இதயம் இரும்பாகிவிட்டதே!

"முத்தம்மா! இனி நான் என் முடிவை மாற்றிக்கொள்ளப் போவதில்லை! என்னால் இங்கிருக்க முடியாது! தோணிக்குப் பணமும் கட்டியாகிவிட்டது. பயணமும் நிச்சயித்தாகிவிட்டது! பதறாதே முத்தம்மா! உன்னைத் தனியே விட்டுச் செல்கிறேனே என்று குமுறாதே முத்தம்மா! நீ உலகம் தெரியாதவள்! வறுமைப் பிடியிலே கிக்கித் தவிக்கும் நம்மை இந்த உலகம் மேலும் மேலும் வதைக்கத்தான் செய்யுமே தவிர, வாழ்த்தாது முத்தம்மா! கரை சேர்க்காது முத்தம்மா! அதல பாதாளத்திலே தள்ளி ஆனந்தப் பண்ணிசைக்கும் இந்த உலகம்! காசு உள்ளவனைத்தான் கைகூப்பி வரவேற்கும்! சொந்த நாட்டானை சோற்றுக்குத் திண்டாடவிட்டு வந்தவனுக்குத்தான் வாழ்த்துப் பாடும்! ஒரு காலத்தில் சீரும் சிறப்புடன் வாழ்ந்தவர்கள்தான் இன்று நாதியற்று, நடுத்தெருவிலும், நாட்டைவிட்டு ஓடியும் பராரியாய், பஞ்சைகளாய்த் திரிகின்றனர்! இருள் சூழ்ந்த நம் வாழ்வில் என்றாவது ஒளி தோன்றத்தான் போகிறது! என்னைத் தடுக்காதே முத்தம்மா! போய் வாருங்கள் என்று ஒரு புன்னகை சிந்தி விடைகொடு கண்ணே!"

—கணவனின் பரிதாப நிலை அவளைக் கண்ணீர்விடச் செய்தது; அவளது அடிவயிற்றிலே தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. 'சரி அத்தான், சம்மதம் தந்தேன்! சடுதியில் திரும்பிவிடுங்கள்!" ஆசை அத்தானுக்கு அன்பு மொழி கூறி அனுப்பினாள். அவளது வாழ்க்கைப் படகைப் புயலடித்துக் கவிழ்க்கப் போகிறது என்று கண்டாளா? "கண்டிச் சீமையில் காலடி வைத்ததும் கடிதம் எழுதுகிறேன கண்ணே!" என்று கூறி

விட்டுச் சென்றான். உயிரை அவனுடன் ஊடாட விட்டுவிட்டு நடமாடும் பிணமாய் உலவிக்கொண்டிருந்தாள் முத்தம்மா. அவளது எண்ணத் திரையில் கடந்தகால சம்பவங்கள் நிழலாடின.

திருமணமாகி ஆறு மாதங்கள் கூட ஆகவில்லை அவர்களுக்கு! செல்வச் செழிப்பிலே சிங்காரமாகச் சிறந்தோங்கி வளர்ந்தவர்களல்ல முத்தம்மாளும் — அமிர்தலிங்கமும்! சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்தவர்கள்தாம்! சின்னாட்கள் இன்பமாக அவர்கள் வாழ்க்கை ஓடியது. நல்ல மரத்தில் 'புல்லுருவி' வளர்வதைப்போல, வறுமை அவர்களிடையே புகுந்து வாட்டத் தொடங்கியது. உற்றாரும் மற்றோரும் உதவுவதாய் இல்லை. 'கொடுத்தால் குறையும். எடுத்தால் அழியும்' என்றவாறு அவர்கள் இருந்துவிட்டனர். அமிர்தலிங்கம் தம் இளம் மனைவி கஷ்டப்படுவதைக் கண்டு கலங்கினான். அவனது நெஞ்சம் வெடித்துவிடும் போலிருந்தது! உழைத்தாலும் அதற்கேற்ற கூலியில்லை; கூலி கிடைத்தாலும் கால் வயிற்றை நிரப்புவதற்கும் கஞ்சி கிடைப்பதாயில்லை! வானம் மழை பொழிந்தால்தானே பூமி செழிக்கும்! மழையில்லை! எங்கும் பசி பட்டினி! அமிர்தலிங்கமும் அவனது சகாக்களும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர். ஆமாம்! 'கள்ளத் தோணி'யில் இலங்கை செல்வது என்று. நாளும் குறிப்பிட்டாகிவிட்டது. கள்ளத் தோணி ஏறுவதற்குப் பணத்திற்கு எங்கே போவது? அமிர்தலிங்கத்தின் சிந்தனை சுழன்றது. எஞ்சியிருந்த நூறுகுழிநிலத்தையும்விற்றுவிட்டுச் 'கள்ளத் தோணி' கட்டணத்தைக் கொடுத்துவிட்டான். மனைவியிடம் சொன்னான்; மாற்ற முடியாதா உங்கள் முடிவை?' என்றாள். மறுத்துவிட்டு அவன் தோணி ஏறிவிட்டான். தன் அன்புக் கணவனைக் கண்ணீரும் கம்பலையுமாய் அனுப்பி வைத்தாள் முத்தம்மா.

✲

நாட்கள் நான்கு நகர்ந்தன. தன் ஆசை அத்தான், "கண்டிச் சீமையில் காலடி வைத்ததும் கடிதம் எழுதுகிறேன் கண்ணே" என்று கூறிச் சென்றது அவளது இதயத்திலே 'பசுமரத்தாணி'போல் பதிந்திருந்தது. கடிதத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஆயிரமாயிரம் கூரிய கத்திகள் பாய்ந்து அணு அணுவாகத் துளைத்தெடுக்கப் போவதை அறிந்தாளா என்ன? பூகம்பம் தோன்றி எண்ணக் கோட்டையை இடித்துத் தள்ளிச் சுக்கல் சுக்கலாக்கிவிடும் என்று கனவு கண்டாளா?

காலைபோது மலர்ந்தது! "ஐயோ, அக்கா! அத்தான் இறந்துவிட்டாராம்!" அடுத்த வீட்டுப் பையன் கையில் செய்தித் தாளை ஏந்திக் கொண்டு ஓடிவந்தான். "ஐயோ என்ன தம்பி சொல்கிறாய்?" அலறினாள் அவள். 'இதோ பாரக்கா' என்று செய்தித்தாளைக் காட்டினான். "இலங்கைக்குக்கள்ளத்தோணியில் போனவர்கள் மன்னார் கடற்கரையில் பிணமாகிக் கிடந்தனர்!" "36 பேரில் 33-பேர் இறந்துவிட்டனர்!" என்றிருந்தது. இறந்தவர்களின் பட்டியலில் தம் கணவனின் பெயர் இருப்பதைக் கண்டாள். "ஐயோ அத்தான்!" அலறிக் கொண்டு வீழ்ந்தாள் முத்தம்மா. மூர்ச்சை தெளிந்து எழ நீண்ட நேரம் ஆனது.

துக்கம் விசாரிக்க அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் வந்துபோயினர். "ஐயோ, பாவம்!" என்றுதான் அவர்களால் சொல்லமுடிந்தது.

"ஐயோ, உலகமே உனக்கு இது தான் தெரியுமா? என் அன்புக் கணவனைப் பறித்துக்கொண்ட ஏ ஆழ் கடலே! உன்கோரப்பசிக்கு இன்னும் எத்தனைபேரை இரையாக்கிக்கொள்ளப்போகிறாய்?" என்று அவள் கேட்கவில்லை. அழுதாள், புரண்டாள். செந்நீரைக் கண்ணீராக்கி ஆறென ஓடச்செய்தாள். ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ! காலம் அவளை இணைத்து இன்ப வாழ்வு நடத்துவதைவிரும்பவில்லைபோலும் —பிரித்துவிட்டது! இயற்கை பறித்துக்கொண்டது அவள் கணவனின் உயிரை! இனி அவள் இருந்தென்ன; போயென்ன?

பட்டமரம் தளிர்த்ததில்லை; எட்டிக்காய் இனிப்பதில்லை; நான் இனி இருந்தும் பயனில்லை. எண்ணமிட்டாள் அவள். மண்டைவெடித்துவிடும்போலிருந்தது. ஆம்! ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள் முத்தம்மா. அலைகடலை நோக்கி ஆவேசம் கொண்டவளைப்போல் ஓடினாள். வெறித்துப் பார்த்தாள்; திரும்பி வீட்டை நோக்கி ஓடிவந்தாள். அவளுக்கென்ன சித்தம் கலங்கிவிட்டதா? பித்தம் தலைக்கேறிவிட்டதா? ஓடினாள் வீட்டினுள்ளே. தாழ்ப்பாள் போட்டாள்.........எதையோ தேடி எடுத்து வாய்க்குள் போட்டு 'மடக் மடக்' என்று தண்ணீரைக் குடித்தாள்...பாயைவிரித்துப்படுத்தாள்... உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்!

○

கண் விழித்தபோது செய்தித்தாள் கீழே பறந்துபோய்க்கிடந்தது! மறுமுறையும் அதில் என் கண்ணோட்டத்தைவிட்டேன். "கள்ளத் தோணி ஏறி இலங்கை சென்ற கணவன் இறந்ததால் மனைவி நஞ்சு குடித்து மாண்டாள்" என்ற அந்தப் பெரிய எழுத்துக்கள் பளிச் சென்று தெரிந்தன.

★

**விற்பனையாளர்கட்கு:**

அதிக இதழ் தேவைப்படுவோர் புதன் கிழமைக்குள் தெரியப்படுத்தவும்.

✲

**சந்தாதாரர்கட்கு:**

சந்தா முடிந்தவுடன் சந்தாவைப் புதுப்பிக்கும் சந்தாதாரர்கள் சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகி.

4-ம் பக்கத் தொடர்ச்சி

பாட்டை சீட்டி அடித்துக்கொண்டே இந்தப் பக்கமாகக் கிணற்றடியைப் பார்த்தான். அங்கு நின்றுகொண்டிருந்த மல்லிகாவைப் பார்த்தவுடன் கண்களை இருமுறை சுழற்றினான். அவனுடைய விழிகளின் அலைச்சலைப் பார்த்து, அதற்கு அணையிட்டன மல்லியின் கண்கள. பின் இலேசான புன்முறுவல்.

'கிறீச்'—குளியலறையைச் சாத்திக்கொண்டிருந்தான் கதிரவன்.

கண்களால் கூறுவதைக் கூறிவிட்டுக் குடத்தை எடுத்துக்கொண்டு கிணற்றடியை விட்டு நகர்ந்தாள் மல்லிகா. அவள், கதிரவன் தன்னைக் கவனிக்கவில்லையென்று நினைத்துக்கொண்டாள்.

✲

இரவில் திடீரென எழுந்துகொண்ட கதிரவன் தண்ணீர் குடிக்கச் சமையலறைக்குச் சென்றான்.

நீர் பருகிவிட்டுத் திரும்பும்பொழுது ஏதோ ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கிணற்றடியில் இரு உருவங்கள் பேசிக்கொண்டிருந்தன. அவன் திரும்புவதைப் பார்த்து ஒரு உருவம் மெதுவாக நழுவியது. மற்றொரு உருவம் மல்லிகாவின் அறையை நோக்கிச் சென்றது.

"மல்லிகா சிறிது நிற்கிறாயா?"

விக்கித்து நின்றாள் மல்லிகா. உடல் சிறிது நடுங்கிக்கொண்டிருந்தது. அருகில் கதிரவன் வந்தான்.

"மல்லிகா, உன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். அவனைப் பற்றி விசாரித்ததில் நல்லவனாகத் தெரியவில்லை. இந்நிலையில் நான் எதைச் சொன்னாலும் உனக்குப் பிடிக்காது. இருப்பினும் என்னுடைய கடமைக்காக உனக்குச் சொல்கிறேன். பதினேழு வயது நிறைந்த—படித்த பெண் நீ. உனக்கு நான் அதிகமாகச் சொல்லவேண்டியிருக்காது. அவனைப் பற்றிப் போகப் போக நீயே தெரிந்துகொள்வாய்."

"போதும். இன்னும் அதிகமாகப் பேசிக்கொண்டிருக்க இது மேடையுமல்ல; நீங்கள் மேதையுமல்ல. விரும்பாதவர் பின் அலைபவரைவிட அவர் உயர்ந்தவரே."

'படார்'—கதவைத்தான் மூடினாள் மல்லிகா.

அன்று கதிரவன், மல்லி இருவருக்குமே தூக்கம் வரவில்லை. எந்தக் கவலையுமற்று குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தவள் மல்லிகாவின் தாய் ஒருத்திதான்!

✲

மூன்று திங்களுக்குப் பின் ஒரு நாள் இரவு—

அன்று ஏனோ கதிரவன் தூக்கமின்றித் தவித்தான். மல்லிகாவைச் சுற்றிச் சிந்தனைக்கொடி படர்ந்தது.

அன்றைய நிகழ்ச்சிக்குப்பின் எக்காரணத்தைக் கொண்டும் கடந்த மூன்று மாதங்களாக மல்லி கதிரவனிடம் பேசுவதில்லை.

சில நாட்களாக மல்லிகா தனிமையையே நாடி, எந்தநேரமும் சிந்தனையின் வசப்பட்டிருந்தாள்.

என்ன காரணமாக இருக்குமென்று சிந்தித்துக்கொண்டிருந்த கதிரவனுக்கு, யாரோ தேம்பித் தேம்பி அழுவதுபோன்ற ஒலி கேட்டது. உற்றுக் கேட்டான்.

சிறிது நேரம் சென்றது. கதிரவனின் உள் மனம் பீதியடைந்த நிலையில் இருந்தது. ஏதனாலென்று அவனுக்கே புரியவில்லை.

'சரக்'—தாழ்ப்பாள் மெல்லிய ஓசையுடன் விலக்கப்பட்டது. பின் அமைதி.

கதிரவன் தன்னறையிலிருந்து வெளியில்வந்துகவனித்தான். மல்லியின் அறைக் கதவுதான் சிறிது திறந்திருந்தது. யாராவது வெளியில் வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால் ஒருவரும் வெளியில் வராதது கண்டு திகைத்து நின்றவன், திரும்பினான். மின்சாரத்தால் தாக்கப்பட்டவன் உடல்கூட அப்படி தூக்கிவாரிப்போட்டிருக்காது!

இன்னும் ஒரே ஒரு வினாடி திரும்பாமலிருந்தால் மல்லிகாவைக் காப்பாற்றியிருக்கமுடியாது. கிணற்றில் குதித்து தற்கொலை செய்யத் துணிவாளென்று அவன் எப்படி எதிர்பார்த்திருக்கமுடியும்?

"மல்லி, இப்படியொரு கோழைச் செயலை நீ செய்வாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"எதிர்பார்த்தது எதுதான் நடந்துவிட்டது?"

"என்ன நேர்ந்தது? எதற்கு இந்தப் பயங்கர முடிவு?"

"அவர் வேறு பெண்ணைப் பதிவுத் திருமணம் செய்துகொண்டார்."

"அவன்தான் 'ஒரு மாதிரி' என்று முன்பே சொல்லியிருக்கிறேனே! கவலைப்படாதே. உனக்கு அவனைவிடப் படிப்பும், பண்புமுள்ள ஒருவனைத் தேர்ந்தெடுப்பது என் கடமை."

"உங்கள் அன்பிற்கு என் நன்றி. ஒரு பெண், தான் விரும்பியவரை அடையமுடியாத பின், அதை மறைத்து வேறொருவருடன் வாழ்வது தகாது. உங்கள் தூய அன்பை நிராகரித்ததற்கு எனக்குத் தக்க தண்டனை வேண்டும்." என்று சொல்லி விக்கி விக்கி அழுதாள்.

"மல்லிகா, அழாதே. இப்பொழுது மட்டுமென்ன, நீ விரும்பினால், உன்னை நானே மணந்துகொள்கிறேன்!"

"நான் வேறொருவருடன் பழகியவள் என்பது தெரிந்துமா இப்படிச் சொல்கிறீர்கள்?"

"ஆம் மல்லிகா! இளமை என்பதைக்கட்டியாள்வதைவிட, நான்கு மதம்பிடித்த யானைகளைக் கட்டியாள்வது சுலபம். இந்த வயதில் எல்லோருடைய வாழ்க்கையிலுமே இம்மாதிரி சலனங்கள் ஏற்படுவது இயற்கைதான்! நடந்துபோனதை மறந்துவிடு. நான் உன்னை ஏற்றுக்கொள்கிறேன். நாளையே அத்தையிடம் சொல்லி, அடுத்து வரும் நன்னாளில் உன்கரம் பற்றுகிறேன்!"

"அத்தான், நீங்கள் இலட்சத்தில் ஒருவர்! உங்களை அவமதிப்பாக நடத்திய என்னை மன்னித்து, உங்கள் அடிமையாக வேண்டுமானாலும் என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்."

"மல்லிகா, இல்லறம் இனிக்க வேண்டுமானால், ஆண், பெண் இருவரிடமிருந்தும் அடிமை என்ற எண்ணம் அகற்றப்படவேண்டும்."

"அத்தான், உங்களுடைய தூய உள்ளத்தை நான் முன்பே புரிந்துகொள்ளாமல் போய்விட்டேனே!" என்று கண்கலங்கக் கூறிய மல்லிகா, கதிரவன் காலடியில் வீழ்ந்தாள்.

✲

டிங், டிங், டிங், டிங்—நான்கு முறை அடித்து ஓய்ந்தது சுவர்க் கடிகாரம்.

பழைய நினைவுகளில் நேரம் போனதே தெரியவில்லை மல்லிகாவுக்கு. கதிரவன் வருவதற்குள் சிற்றுண்டி தயாரிக்க வேண்டுமென்ற நினைவு வந்தவுடன், எழுந்து சமையலறைக்குள் புகுந்தாள்.

★

# "வைகறை வந்ததால்....!"

மணமாகிச் சின்னாள் கழிந்த பின்னர் பொருள் வேட்கையால் பிரிந்து சென்று, பெரும் பொருள் சேர்த்துக் கொண்டு வந்து சேருகின்றான் கணவன். பிரிவால் வருந்தி யிருந்த மனைவி மகிழ்ச்சியோடு இரவுப் பொழுதைக் கழிக்கிறாள். விடியற் காலம் வருகிறது. சேவலும் கூவுகிறது. சேவல் கூவியதால்தான் பொழுது புலர்கிறது எனக் கோபத்தோடு சேவலைக் கடிகிறாள் (சாபம் கொடுக்கிறாள்) தலைவி.

அறனோடும் அன்போடும் இயைந்து, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இளமைத் தன்மை நிறைந்த உள்ளங்கள், எழில் மிக்க இளமைக்கே உரித்தான ஏறுபோல் பீடுநடையோடும், நல்வினை மிக்க துணிவோடும், நெஞ்சம் உவக்கும் தூய்மையோடும், தமிழ் மணக்கும் புகழோடும், பொலிவோடும் காதல் கொண்டு ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்ட இரண்டு இதயங்கள், தன்னேரில் தஞ்சைத் தரணியின் நன்செய்யைப் போன்றும், அதன் வளம் கொழிக்கும் பொன்னிப் பேராற்றின் தன்மையே போன்றும், கசப்பு இன்னும் தீண்டப்படாத இருகாமர் நெஞ்சங்களும் புத்தம் புதிய வாழ்வியல் நடாத்தத் தொடங்கின.

செம்புலப் பெயல் நீரன்ன தன்வயமான நெஞ்சினை யுடையாரது மணவாழ்க்கையைத் தண் மதிமிக்க கதிரோன, தன் முழுமதியால் இன்னும் சிலமுறை கூடக் கண்டான் இல்லை. அதற்குள்ளே சின்னஞ் சிறு கணப் பொழுதையும் பேருரு யுகமாகவும், யுகத்தைக் கணமாகவும் கண்டறிந்தார்கள். உலகியல் தத்துவப் பேருரைகள், அன்றாட நடைமுறைச் செயல் துறைகள், ஞாலப் பெரு செய்திகள் முதலான அனைத்தையும், அவற்றிற்குப் புறம்பான கனவு போன்ற அமிழ்தத்தை வெல்லும் அந்த வாழ்க்கையையும், கோலமார் இயற்கை தீண்டுமளவும், ஏன் அதற்கப்பாலுங்கூட நீட்டித்திருக்குமென எண்ணியே இறுமாந்து இருந்தார்கள்.

ஈருடலும் — ஓருயிரும் கல்வியும் அதனது நயமும், நீரும்—சுவையும், மஞ்சளும், அதன் பொலிவும், ஈதலும் — அதனால் அடையும் இன்பமும், தமிழும்-இனிமையும், யாழும், இசையும், பண்ணும், பாவும், அறவாழியும் மணிவண்ணனும்—பூரணி

**துரை—பிச்சை**

யும், ஈத்துவக்கும் இன்பம் இல்லார் நெஞ்சத்தைப் போன்ற (இருள் மிக்க நிறம்) காக்கையும் அதனது கருமணியும் எனப் பலவாய உவமைகள் எல்லாம் அவர்களுடைய புது வாழ்க்கையின் நெருங்கிய அண்மையை விரித்துரைத்தற்குப் போதுமான வகையாக இலலை. வாழ்க்கை, வரையரையற்ற இன்பக் கடலாகவே தோன்றியது.

இதனிடையே பிரிவென்று ஒன்று தானாகவே தோன்றியது.

மனிதனுக்கு வயிறென்று ஒன்று வாய்த்திருக்கிறதே! அதற்குக் காதலின் சுவையோ இன்பமோ, துன்பமோ தெரியுமா? தெரியவே தெரியாது போலும்! தெரிந்திருப்பின் உலகத்தவரை அவலக் கவலையில் ஆழ்த்துமா? அதற்குத் தேவையானது உடலை வளர்த்துக் (கொள்ள) கொடுக்க உணவொன்றுதான். உணவுக்குப் பொருள் வேண்டும். பொருள் வேண்டுமெனின் செய்வதென்ன? திரைகடலோடியும் திரவியம் தேடு என்பது முதுமொழியன்றோ.ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியம் இயம்பும் பிரிவு வகைகளில் 'பொருள் வயிற் பிரிவும் ஒன்று. தமிழர் தம் நெறியின் வழி பிரிந்து சென்று தானே பொருளீட்டல் வேண்டும். அதனை எண்ணத்துள் கொண்டு தான் தலைவன்,தான் பொருள் வயின் பிரிய எண்ணினான்.

தலைவன் பிரிவினைக் குறிப்பால் உணர்ந்தாள் தலைவி. தோழி வாயிலாக அஃது உறுதியெனவும் அறிந்தாள். அது போழ்து தலைவனும் வந்து சேர்ந்தான். காணாதிருக்குங்கால் எழுந்த பூசல் ஊடலாக உருவெடுத்தது. பிரிவெண்ணி வருந்துகிறாள் எனத் தெளிந்தான். ஊடல் தீர்க்க முயன்றான். தோல்விமேல் தோல்விதான்.

பொன்னே! பூவே! பூங்கோதாய் சொன்னேன் உறுதி. விரைவில் உறுபொருள் சேர்த்து மீள்வேன் என்றான்.

பிரிவென்றால் கல்லூரிப் பாடம் போல் கசக்கிறதே! எப்படி அத்தான் தனித்திருப்பேன் எனத் தேம்பலிடையே தெரிவித்தாள்.

கார்குழல் நீவி, கதுப்பினை வருடி, கண்ணின் பாவாய் கலங்காதே! மொழிமேல் ஆணை, காலந்தாழ்த்தாது வருவேன் எனக் கூறிக் கண்ணீர் துடைத்து நின்றான். கண்

ணீர் மல்கிய காரிகையின் வாடிய மேனி நிழற்படம்போல் தலைவனின் நெஞ்சத்தே நின்றது.

தளிர்க்கொடியாள் வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பேன்; விரைவில் மீளவேண்டும் என மொழியாது மொழிந்தாள்.

உடலைப் பிரிந்து உள்ளத்தைப் பிரியாது நீரருவி சோர நின்ருள், நின்றவள் தன்னை நினைவில் வைத்து, நெஞ்சத்தில் நிறுத்தி நெடுந்தூரம் பிரிந்தான் பொருள் வேட்கையால்.

பிரிவுத் துயரால் அவள் அயர்ந்தே போனுள்.

காதலன் திரும்பி வருவதுவரை வாழ்வது யாங்ஙனம் என உள்ளம் கலங்கினுள் — காரிகை. உணவு செத்தது. அந்திமாலை சிறப்புச் செய்யும் அணிகலன்கள் அகன்றன. உறக்கம் தொலைந்தது. பிரிவு அது நின்று நின்று உயிரை உவந்தது (கொஞ்சங் கொஞ்சமாக) சிறிது சிறிதாகச் சித்திரவதை செய்து பருகிடும் மாய மரணம் போன்றது போலும்!

தலைவன்—தன்னேரில் கொழுநன் இல்லம் திரும்பும் இனிய நன்னுளை இதயத்தில் இருத்தி எதிர்பார்த்து, அஃதே தன் வாழ்க்கையின் ஒரு இலக்காகக் கொண்டு எவ்வண்ணமோ உயிரை உடம்பிடையே உலவவிட்டுக்கொண்டு வாழ்ந்து வந்தாள்.

காலம் கழிந்துகொண்டிருந்தது. வெங்கதிரோனும்! தண் கதிரோனும் மாறி மாறி மண்ணுலகை அரசோச்சினர். இயற்கை தன் எழில் படைப்பை நடாத்திக்கொண்டு இருந்தது. பருவங்கள் ஆறும் பாவையரின் வளர்ச்சிபோல் விரைவில் வளர்ந்து சென்றுகொண்டிருந்தன. மாலைக்காலத்துப்பீர்க்கம் பூக்கள் இரு பருவங்கள் எழிலாகப் பூத்துப் பயன் அளித்து, பயன் கருதாது காய்ந்து கருகியது.

ஒரு நாள் மாலை, இவள் மையலைத் தீர்க்கும் மாலைக் காலத்தே, ஆலையினிடையே அகப்பட கரும்புபோல் மெலிந்த மேனியினையுடையவளைகத் திரண்ட செல்வத்தைத் தலைமேலே தூக்கிக்கொண்டும், தன் காதல் மனையாட்டியை உள்ளத்தே சுமந்து கொண்டும் வந்து சேர்ந்தான். சொல்லரிய மகிழ்ச்சியினுல் அவன் மார்பிடத்தே தன் வெம்மதியை புதைத்துக்கொண்டு பனிநீரைக் கொட்டினுள்.

பன்மணிப் பேழையுள் அடைக்கலம் புகுந்திருந்த அணிகலன்கள் அனைத்திற்கும் விடுதலை கிடைத்தது. மாசு போக்கி மெருகிட்டாள்.

அடங்கிக் கிடந்த அவைகள் அங்கங்களை அடக்கி ஆண்டன. வெம்மதி தண்மதியாகத் திகழ்ந்தது. கார் நிகர்த்த குழல் விளையாடும் கண்களிடையேயும், பொற் கதிர்கள் விழுதாக இறங்கும் செக்கர் வானிடையேயும், மின்னலும் விண்மீன்களும் தோன்றி ஒளி செய்தன. பல அறைகளிலே கிடக்கும் பட்டாடைகள் பட்டுப்போன்ற மேனியைத் தொட்டுத் தழுவி மென்னழகின் மேன்மையைப் புலப்படுத்தின.

செங்காந்தள்விரல்கள் முல்லையைக் கொய்து, கொண்டல் நிகர்க்கும் கூந்தலை அணி செய்தன. அகிலும், இன்ன பிறவும் அறல் நாணும் குழலுக்கு விருந்தாயின. சந்தனமும், சாந்தும், சுண்ணமும் மேனியைப் போர்த்தி மெருகிட்டன. கண்ணிற்கு மையும் காந்தள் களிக்கும் விரல்களின் நகத்திற்கும், தாமரையிதழொத்த பாதங்கட்கும் மருதாணியும், சாந்தும் நயம்பட ஊட்டினுள். அழகு தருவன எவையெவையோ அவையெல்லாம் அவள் மென்கரங்களின் வாய்ப்பட்டு இன்பமடைந்தன. அழகெல்லாம் ஒருங்கே கூட்டி அவனை ஆட்கொண்டும், தன் அழகைக் கண்டு அவன் அப்படியே சொக்கி ஆற்ருமையால் அல்லல் பட வேண்டும்மென எண்ணிச் செயல்படுத்தினுள்.

அவனுக்கு என்று தன் கைகளாலேயே அன்னம் ஆக்கி, அதனை அன்புடன் அழைத்துப்படைத்தாள். வெற்றிலையும் பிறவும் உண்ண வழங்கினுள். சோலை சிரிக்கும் காலை கழிந்தது, கொடுங்கோலன் ஆட்சி போன்ற நண்பகலும் தன் தீவினையைக் கழிக்க மேற்குக் கடலை நோக்கிச் சென்ருன்.

காமம் கழிபடர் மாலை வந்தது. தலைவியைச் சுற்றி நின்ற துயரமும் தீர்ந்தது. வேல்போன்ற விழிக்கு விருந்தானவிடிகின்ற இராப்பொழுது விடியாமல் வந்தது.

இரவிற்கும் ஒரு முடிவு. வைகறை யென்பது உண்டு. இதனை அவர்கள் உணராமலே இருந்துவிட்டார்கள். இன்ப நுகர்ச்சியின் போதையிலே வினுடிக்கு வினுடி இரவு குறைந்து வருகின்றது, என்ற நினைவே அவர்களிடையே தோன்றவில்லை. பொழுது புலராமலே போய்விடும் எனவும், அடக்கம் இலான் செல்வம் போலும், நன்னடக்கையிலான் ஆட்சி போலும், கொடைப் பண்பிலார் மனம்போலும், வஞ்சமிகு சீனர் நெஞ்சம் போலும், இரவே அரசு ஆளுமென்று எண்ணியிருந்தார்கள்போலும்! (அல்லது) அஃது அவர்கட்கு அந்த நினைவற்றல்கூட இல்லைப்போலும்—ஆதி உணர்ச்சியே எல்லாமாய், எல்லாமே உணர்ச்சியாய், உணர்ச்சிக் கடலாயும் அவர்கள் கண்டார்கள். திடீரென்று வஞ்ச நெஞ்சங்கொண்ட செஞ்சீன எல்லையிலே நின்று தொல்லைகொடுத்தது போலும்! வைகறையின் முதற் சேவல் கூவிற்று. மிகுபிணியாளரை இயற்கை அழைப்பதுபோலக் கூவி நின்றது.

கனவுபோல் இஃது நினைவிற்கு வந்தது. சேவல் வந்ததா? எழுந்ததா? கூவிற்ரு? அஃதின்றேல், சாக்காடுதான் தன் வருகையை அறிவித்ததோ? என ஐயமுற்ருள்.

முத்துவடம் முறுவல்பூத்து அணி செய்யும் முதிராத மார்புச் செல்விக்குச் சினம் சீறியெழுந்தது; மாண்பு கெட்ட இந்த இழிகுலச் சேவலுக்கு என்ன ஒறுத்தல் அளித்தால் ஏற்புடைத்தாகும்? இத்தகைய இரவுக்காக—அதன் கொள்ளைகொள் இன்பத்திற்காக எத்தனை எத்தனை எண்ண அலைகள், எத்தகைய இன்பக் கற்பனைகள், நெஞ்சக் கொதிப்புகள் ஆசை பெறவிழையும் மருட்சி, புண்படாத புதிய மென்மலரை விழையும் வரிவண்டு பெறும் மகிழ்ச்சிபோலச் சென்ற தலைவன் மீளுவானே என்றெண்ணி இறுமாந்த நாட்கள் எத்தனையோ இமை மூடா இரவுகளை யாரறிவார்?

உணவொழித்த வேளைகள், தாமரையிலையின் மென்மையை யொத்த உடலினையுடைய தத்தையின் (கிளி) மொழி பயிலா நாட்கள் தான் எத்தனையோ? செந்நீரன்ன கண்ணீரும், பூசல்தருகின்ற அன்புக் கண்ணீரும், பிறரறியாப் புலம்பலும் பெருமூச்சும் அம்மம்ம! நினைக்க நினைக்க......இத்துணைக்கும் பிறகு அருமையாக வந்திருக்கும் கொழுநனுடன் இணைந்திருப்பது இந்த வன்னெஞ்சச் சேவலுக்கு மனம் பொறுக்கவில்லை.

பொருத காரணத்தால்தான் 'கொக்கரக்கோ', 'கொக்கரக்கோ'

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

வென்று தொண்டை கிழியக் கத்தி இரவுப் பொழுது ஈன்றிடும் பகற் பொழுதும் பகர்ந்திடற்கு ஒல்லாத பிரிவும் வருவதை அம்பலப்படுத்தி அறிவிக்கவும் வேண்டுமா? போயும், போயும் இம்மடைமைச் சேவலை யார் கேட்டார்கள்.

பிரிவும், பிரிவால் வாடும் துயரும், துயருக்குப் பின் பரிவும், பரிவினுல் ஏற்படும் சேர்க்கையும்பற்றிச் சேவலுக்கு என்ன தெரியும்?

அழகிய இளையகொண்டை இருக்கிறது. நினைத்த அளவிலேயே நினைத்தவாறு காதல் கொள்ளுவதற்குக் கணக்கிலடங்கா பேடைகள்தானுண்டு. ஏகபத்தினி விரதமா சேவல் மேற்கொண்டு வாழ்கிறது? அதற்கென்ன? ஒருமகள் தலைவனுடன் ஓரிரவு முழுமையாக வாழ்வதற்குப்படுகின்ற துயரங்களை எல்லாம் அது எங்கே அறியப் போகிறது?

கொடிய உள்ளம் கொண்ட சேவலே! உன்னைச் சும்மா வெட்டிக் கொன்று ஒழித்தாலும் அது ஒறுத்தலாக இருக்காது. அதனேடு என் மனமும் பொறுக்காது. இரண்டாம் சாமப் பொழுதாகிய நட்ட நடு இரவிலே அரணம் வருவதைப்பற்றி அஞ்சாமல் அயர்ந்து உறங்கும் நேரத்திலே, வீட்டில் எலி பார்த்து வருகின்ற நாட்டுப் புலியின் (பூனை) தமையனுன காட்டுப் பூனைக் குட்டியானது ஓசை செய்யாமல் 'லபக்' கென்று கௌவிப் பல கோணங்களில் பலவாறுக அப்படியும், இப்படியுமாக அசைத்து, அசைத்து, அடித்து அடித்து, கொஞ்சங் கொஞ்சமாகத் துன்புறுத்திக் கொல்லுதல் வேண்டும். அவ்வண்ணம் கொன்ற பின்னும் அதன் இறைச்சி முழுமையையும் அதுபோழ்தே தின்றுவிடவும் கூடாது. இருள் செறிந்த காட்டில் புதர் சூழ்ந்த இருப்பிடத்திற்கு இழுத்துச் சென்று கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு சதையினையும், உறுப்பினையும், பிண்டம், பிண்டமாகப் பிய்த்துப் பிய்த்துக் கிழித்துக் கிழித்துப் பன்னுட்கு உணவாக வைத்து உண்ணுதல் வேண்டும். அஃதுதான் அதற்கு ஏற்றதோர் தண்டனையும் ஆகும். ஆம். இக் கொடிய சேவல் அடையவேண்டிய நெடிய தண்டனை, சரியான தண்டணையுங்கூட என்பதனை என்னெத்த ஏந்திழையர் எவரும் ஏற்பர். அதனேடு இனிமேலாவது மனமொன்றிய காதலர்கள் கூடி உறங்கும் இன்பத்தைப் பாதியில் கெடுக்க இயலாதல்லவா?

இவ்வண்ணம் பொருள் விரித்திடும் ஏற்றமிகு பாடல் சங்க நெடும் பாக்களைக் கொண்ட குறுந்தொகையில் வருகிறது.

குவிணர்த் தோன்றி ஒண்பூ வன்ன
நொகுசெந் நெற்றிக் கணம்
கொள்சேவல்!
நள்ளிருள் யாமத்து அல்குஇரை—
யாகி
கடுநவைப் படீஇயரோ நீயே நெடு
—நீர்
யாணர் ஊனன் தன்னெடு வதிந்த
ஏமம் இன்துயில் எடுப்பி யோயே!

சொல்லின்பத்திற்கும், பொருளின்பத்திற்கும், தமிழின் தன்னேரில் வனப்பிற்கும் இப்பாடல் ஒரு எடுத்துக்காட்டாக இலங்கவில்லையா?

2-ம் பக்கத் தொடர்ச்சி

மூன்றும் நந்திவர்மன் கொண்ட இலக்கியப் பசி, அவன் இன்னுயிர் குடித்து, என்றும் மறவா இன்தமிழ் இலக்கியம் தந்தது. ஆம் நந்திக் கலம்பகமாக உருப்பெற்றது. அறிவுப் பசியினுல் அருந்தமிழ்த் தேன் குடிக்க எண்ணினுன் அதியமான். அதனுல் சடுதியில் கிடைக்காத, சாவை நல்காத அரு நெல்லிக் கனியைப் பெற்றுன். அதனை அருந்தி ஆண்டு கழியாது அரசோச்சலாம். ஆனுல் அதியமான் அவ்வாறு செய்யவில்லை. அறிவு வளர்ந்து—அறம் சிறந்து தான் இன்புறுவது போல உலகு இன்புற எண்ணினுன். அருந்தமிழ் வேட்கையால் ஔவைக்கு ஈந்தான். தேனினும் இனிய தீந்தமிழ்ச் சுவை மாந்தி மாண்புற்றுன்.

சாக்ரட்டீஸ் கொண்ட அறிவுப் பசி மனதைச் சிந்திக்கும் மாண்பை உணர்த்தியது. பகுத்தறிவு வரை வழி கோலியது. பிளாட்டோவைப் பிணித்த அறிவுப் பசி அரசியலில் புத்துணர்ச்சி ஊட்டியது. புத்தர் கொண்டப் பசி அகிலத்தை அன்பால் அரவணைக்கப் பாடுபட்டது. ஆசியாவின் ஒளி அருள் ஒளி வீசியது. காந்தியாரின் பசி, அடிமை விலங்கொடித்தது; அகிம்சையைக் காத்து வளர்த்தது. இதனுல் அறிவுப் பசி அகிலத்திற்கு நன்மையே அன்றி தீமை அல்ல என்பது போதரும்.

ஞாலத்தைப் பிணித்துள்ள பசிகளில் உடற்பசி அழிவைத் தரும். அறிவுப் பசி ஆக்கம் ஊட்டி, ஊக்கம் தரும். மற்றும் உள்ளத்தைத் தீண்டி உணர்வைத் தூண்டும், எழுச்சியூட்டி இன்பந் தரும். உடற்பசியோ அச்சம், அடிமையினை அரவணைத்து அகிலத்தைக் கெடுக்கும் அறிவை—ஆற்றலை, அஞ்சாமையை —ஆண்மையை அணையாது அணையாது ஒளிரச் செய்வது உளப்பசி.

எனவே சுடச்சுடப்பொன்ஒளிவிடுதல்போல, அரைக்க அரைக்கச் சந்தனம் மணப்பதுபோல், புகைக்கப் புகைக்க அகில் வாசனை வீசுவது போல், உளப்பசி உண்டாக—உண்டாக உணர்வு பெருகும். அதனுல் இலக்கியம் பெருகும். இல்லற வாழ்வில் சிறப்புறும். இன்ப மணம் வீசி அன்பறம் தழைக்கும். அகிலம் விளங்க ஆணவம் அழிய அறிவுப் பசியை நாடுங்கள். உளப் பசியினுல் உறவாடி உரையாடி உலகு ஒற்றுமை நலம் பூணலாம் அல்லவா!

எனவே, எல்லாருக்கும் உளப்பசி இல்லாது அறிவு நிரம்பப் பெற்று விட்டால், உடற்பசி நீங்க வழி தானுக ஏற்பட்டுவிடும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.